மாலை: 50 மணி: 6 ஜூன் 2008 விலை ரூ. 10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு



நடராஜபெருமான்

விரைவு, கனிவு மற்றும் நம்பகத்தன்மை

# ரெப்கோ வங்கி

இவையே ரெப்கோவின் தனிச்சிறப்பு

(இந்திய அரசு நிறுவனம்)

த.அ. 33, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை – 600 017

தொ.பே. 28342845, 28340715 E-mail : ho@repcobank.co.in Website : repcobank.co.in

உங்கள் இல்லம் தேடி வரும் இனிய வங்கி

"வாடிக்கையாளர் சேவையில் புதிய பரிமாணம்"

| சிறப்பான முதலீட்டு திட்டங்கள் | எளிய கடன் திட்டங்கள் |
|---|---|
| – மற்ற அரசுடைமை வங்கிகளைக் காட்டிலும் அதிக வட்டி (ஆண்டுக்கு 10% வரை மூத்த குடிமக்களுக்கு கூட்டு வட்டி 13.44% வரை) | – உடனடி நகைக் கடன் |
| – மாதாந்திர சேமிப்பிற்கும் 10% வரை வட்டி | – தொழில் / வியாபார விரிவாக்கக் கடன் அசையாச் சொத்தின் மேல் திருமணம், மருத்துவ செலவு மற்றும் தொழில் கடன் |
| – உங்கள் முதலீடுகளுக்கு முழு பாதுகாப்பு | – சிறுவணிகர் கடன் |
| – முழுவதும் கணினிமயமாக்கப்பட்ட சேவை | – வாகன வசதிக் கடன் |
| – உங்கள் கடை / வீட்டிலிருந்தே தினசரி சேமிப்பு மற்றும் கடன் வசூல் செய்யும் வசதி | – கனவு இல்லத்திற்கான, விரைவான வீட்டு கடன் திட்டங்களுக்கு பிரத்யேக நிறுவனம் |
| – கனிவான, துரித, நிறைவான சேவை | – ரெப்கோ ஹோம் ஃபைனான்ஸ் லிட்., |
| – வாடிக்கையாளர் சேவையில் 38 ஆண்டுகள் | – மகளிர் சுய உதவிக் குழு உருவாக்கம், பயிற்சி மற்றும் கடன் உதவிக்கு – ரெப்கோ |
| | – நுண்கடன் நிறுவனம் |

ADYAR (044) 2440 4570 CHENNAI (044) 2499 6161 GEORGE TOWN (044) 2523 3895 PADI (044) 2654 4416 PALLAVARAM (044) 2264 2398 RED HILLS (044) 2641 9176 TAMBARAM (044) 2226 2883 T-NAGAR (044) 2834 2347 TONDIARPET (044) 2595 4055 VYASARPADI (044) 2673 1048 COIMBATORE (0422) 2490562 COIMBATORE CORP.(0422) 2218766 COONOOR (0423) 2231456 DINDIGUL (0451) 2424375 ERODE (0424) 2254118 GUDALUR (04262) 263949 KARAIKUDI (04565) 239798 KARUR (04324) 231391 KUMBAKONAM (0435)2402779MADURAI (0452) 2342875 NAMAKKAL (04286) 232875 PATTUKOTTAI (04373)253299 PUDUKOTTAI (04322)226282SALEM(0427)2266531 THANJAVUR (04362)237295 THENI (04546) 262450 THIRUNELVELI (0462)2579136 TIRUPPUR (0421) 2232792 THIRUVANNAMALAI (04175) 252808 THOOTHUKUDI (0461)2333908 TRICHY (0431)2701090 VALPARAI (04253)222602 VELLORE (0416) 2226837 PONDICHERRY (0413)2330068



# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2039 - ஆனி மாதம்
மாலை: 50 மணி 6 ஜூன் 2008

பேரன்புடைப் பெருந்தகையீர்!

வணக்கம்.

"விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டர் நாயகன் தன்னடி சூழ்மின்காள்
பண்டு நீர் செய்த பாவம் போய் அறும்
வண்டு சேர் பொழில் வான்மியூர் ஈசனே"
—திருநாவுக்கரசர்.

விண்டு விரிந்து மலர்ந்த அழகிய மலர்களைக் கொண்டு பரமனைப் பூசித்தால் பண்டு செய்த பாவங்களும் பழிகளும் போய் இன்பமுண்டாகும் என்று கூறுகிறார் அப்பர். புண்ணியம் செய்தார்க்கு பூவுண்டு நீருண்டு என்பார் திருமூலர். பூசைக்கினிய பூக்கள் யாவும் பூத்துக் குலுங்கும் இனிய வசந்த காலம் இது. முதுவேனில் கழிந்து இனிய தென்றல் வீசும் இளவேனில் கால இதழாக திருக்கோயில் வருகிறது. வசந்தம் என்றாலே ஆனந்தம் அல்லவா ? ஆனந்த நடராசப் பெருமானை முகப்பில் கண்டு மகிழ்கிறோம். அவருடைய 108 போற்றிகளுடன் நூல் மலர்கிறது.

இராமலிங்க வள்ளலார், கோவிலூர் முத்துராமலிங்க ஞான தேசிகர், பலபட்டை சொக்கநாத புலவர், படிக்காசுப்புலவர், கவிராச பண்டிதர், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள், குருநமசிவாயர், அழகிய சொக்கநாதப்பிள்ளை ஆகியோரை அம்மன் அடியார்கள் வரிசையில் இவ்விதழில் தொகுத்து வழங்கியுள்ளார் பொற்கிழிக் கவிஞர் சொ.சு.மீ.சுந்தரம் அவர்கள்.

ஆனிமகம் வாதவூரடிகளான மணிவாசகப் பெருமான் முத்தி பெற்ற மாதமாகும். அவருடைய திருவாசகத்தின் சிறப்புக்களையும் திருக்கோவையாரின் மாண்புகளையும் சேத்துப்பட்டு சித்தாந்த இரத்தினம் எம்.ஆர்.சந்தானம் அவர்கள் இவ்விதழில் வழங்கியுள்ளார்.

திருவரங்கனைக் காண வேண்டுமென்ற ஏக்கத்தினை எவ்வாறெல்லாம் குலசேகர ஆழ்வார் தமது பாசுரங்களில் பகர்ந்துள்ளார் என்பதை "குலசேகரரும் திருவரங்கமும்" என்ற தலைப்பில் தொகுத்து வழங்கியுள்ளார் முனைவர் ஏ.பரந்தாமன் அவர்கள்.

அறுபத்து மூவர் திருவுருவப்படங்கள் நாயன்மார்களின் வாழ்க்கையை ஒட்டிய நிலையில் வண்ண ஓவியங்களாக கண்ணாடியில் வரையப்பட்டுள்ளதன் பிரதிகள் கண்ணுக்கும் கருத்துக்கும் களிப்பூட்டும் வகையில் இவ்விதழில் வண்ணத்தில் வளமாக வெளிவந்துள்ளது.

புறத்தே மலர் தூவி வழிபடுவது போல அகமலர்களால் வழிபடுவது பிரார்த்தனையாகும். பிரார்த்தனையின் பெருமைகளைப் பேசுகிறார் கவிஞர் தென்னம்பட்டு ஏகாம்பரம் அவர்கள்.

ஆமாத்தூர் அழகியபிரானாகிய அபிராமேசுவரரின் திருக்கோயில் பெருமைகளை பனையபுரம் அதியமான் காட்டும் ஆலய உலாவில் காண்கிறோம்.

மேலே குறித்த பாடல் வசந்தத்தியாகர் எழுந்தருளியிருக்கும் திருவான்மியூர்ப் பதிகமாகும். திருவான்மியூரின் பெருமைகளையும், அருமைகளையும் கட்டுரையில் சொல்லோவியமாகக் காண்கிறோம். அத்தலத்தில் 45 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டு நெடுங்காலம் கவனிப்பாரற்று இருந்த கோபுரம் முழுமை பெற்று புதுப்பொலிவுடன் விளங்குவது இந்த நூற்றாண்டின் சாதனைகளில் ஒன்றாகும் . இந்த வரலாற்றையும் தனிக்கட்டுரையில் இவ்விதழில் காண்கிறோம்.

திரு.இராமநாதபிள்ளை அவர்களின் உலகம் உய்ய உதித்த உடையவர் தொடர் கட்டுரையும், அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் நினைவலைகளாக அவரின் "சிறந்த செல்வம்" எனும் கட்டுரையும் இவ்விதழில் ஒளிர்கின்றன.

இந்த இனிய நல்வேளையில் எங்கும் நிறைந்து பிரகாசமாய் இனிமையாய் விளங்கும் இறைவன் அருளால் எல்லோரும் எல்லாமும் பெற்று இனிமையுடன் வாழப் பிரார்த்திக்கிறேன். வாழி நலம் சூழ!!

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.,)
சிறப்பு ஆணையர்



# குறளோவியம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ''பிறப்பொக்கும்'' என்று வள்ளுவர் அழுத்தம் திருத்தமாகக் கூற வேண்டியிருந்திருக்கிறது. இன்று இந்த இருபதாம் நூற்றாண்டில், சமுதாயம் நூற்றுக்கணக்கான ஆயிரக் கணக்கான சாதிப்பிரிவுகளால் சிதறுண்டு கிடப்பது போலவே அன்றும் வள்ளுவர் காலத்திலும் பிறப்பால் உயர்வு தாழ்வு மனப்பான்மை பாராட்டப்பட்டிருக்கிறது. அந்த வேதனையைத் தாங்க முடியாமல்தான் வள்ளுவர் பிறப்பொக்கும் எல்லா உயிர்களுக்கும் என்று குறள் தீட்டியுள்ளார்.

எல்லா உயிர்களுக்கும் என்று வள்ளுவர் குறித்தவுடன்; விலங்கினங்களும், பறவையினங்களும், ஊர்ந்து சென்றிடும் புழு பூச்சி இனங்களும் - அவரைப் பார்த்துக் கேள்விகளை அடுக்கின.

''எங்களுக்குள் சாதிப் பூசல்களே என்றைக்கும் இருந்ததில்லை. சாதி உணர்வுகள் தலை தூக்கி அதன் காரணமாக நாங்கள் அமளிகளை உருவாக்கியதே இல்லை! அங்ஙனமிருக்க 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று எம்மையும் சேர்த்து இழிவுபடுத்துதல் முறைதானோ?''

இவ்வாறு மிருகங்கள் கேட்டன! பறவைகள் கேட்டன! ஊர்வன கேட்டன!

''உயிர்கள் என்று பொதுவாகச் சொன்னதால் எல்லா உயிர்களையும் குறிப்பிடு மெனினும் உங்களுக்கு ஆறாவது அறிவான பகுத்தறிவு இல்லாத காரணத்தால் உங்களிடையே சாதிப்பூசல்கள் எழுவது இல்லை! பகுத்தறிவுள்ளவர்களாகக் கூறிக்கொள்ளும் மனிதர்களிடையேதான் பல்லாயிரம் சாதிகள்! சண்டைகள்! உயர்வு தாழ்வு உணர்வுகள்! குறளைப் படிக்கக்கூடியவர்களுக்காகத் தான் இதனை எழுதினேன். நீங்கள் படிக்க இயலாதவர்கள், உங்களுக்காக, இதனை நான் எதற்காக எழுதப்போகிறேன்! எனவே நான் 'உயிர்கள்' என்று குறிப்பிட்டிருப்பது இந்தக் குறளைப் பொறுத்தவரையில் மனிதர்களை எண்ணித்தான்!''

வள்ளுவர் விளக்கமளித்துவிட்டு வேறு வழியாகப் பயணம் தொடர்ந்தார். அங்கே இருவர், விவாதித்துக் கொண்டிருந்தனர்.

ஒருவர்: பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லையென்று குறள் கூறினாலும் கூட அவரவர் செய்கின்ற தொழில்களின் வேற்றுமையால் சிறப்பு இயல்புகள் மாறுகின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கிறது. அதனால் இசைவாணனாகிய நான் ஆசிரியத்தொழில் புரியும் உம்மைவிடச் சிறப்புடையவன்.


மற்றவர்: இல்லை! மறுக்கிறேன்! ஆசிரியர் தொழிலே சிறந்தது! அதற்கு ஒப்பிடக் கூடியதுகூட அல்ல உமது இசைத்தொழில்!

இருவரின் உரையாடல் சூடேறுவதற்கு முன்பு வள்ளுவர் குறுக்கிடுகிறார்.

''சொற்போரை நிறுத்திடுக! நான் தொழிலுக்குத்தொழில் உயர்வு தாழ்வு இருப்பதாகவோ - சிறப்பு இயல்புகள் மாறுவதாகவோ - கூறிடவில்லை! ஒவ்வொரு தொழிலுமே அதனைச் செய்வோரைப்

பொறுத்து வேறுபடுகின்றன. இதோ உங்களையே எடுத்துக் கொள்வோம்! ஒரு இசைவாணர், பாடினாலே ஊரார் காது கொடுத்துக் கேட்க மறுத்து வேறு அலுவல்களைக் கவனிப்பர்! மற்றொரு இசைவாணரின் இனிய இசையை விடிய விடியக் கேட்டு மகிழ்வர்! அது போலத்தான் ஒரு ஆசிரியர் மாணவரிடையே கேலிப் பொருளாக விளங்குவார்! இன்னொரு ஆசிரியரோ மாணவரால் மதிக்கத்தக்க மாண்புடையவராகத் திகழ்வார்! ஆகையால் தொழிலுக்குத் தொழில் வேறுபாடுகாண நான் விழைந்திட வில்லை. செய்யுந் தொழில் எதுவாயினும் அதிலே எய்துகிற சிறப்புகள் வேறுபடுகின்றன; செய்பவரின் அறிவாற்றலைப் பொறுத்து! இப்படித்தான் என் கருத்துக்கு விளக்கம் பெற வேண்டுமேயல்லாமல் நீங்கள் மோதிக்கொள்வது முறையல்ல.''

குறள் தந்த கோமானின் விளக்கவுரை கேட்டு, இசைவாணரும், ஆசிரியரும் மகிழ்ந்து வணங்கினர்!



மாண்புமிகு முதல்வர்
டாக்டர் கலைஞர்

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.''

அதிகாரம்: 98 பெருமை பாடல்: 972.

- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

## இதழின் உள்ளே


அம்மன் அடியார்கள் - சொ. சு. மீ. சுந்தரம் 5
மாணிக்கவாசகரின் வாசகமும் கோவையும் 9
- டாக்டர் எம்.ஆர். சந்தானம்
குன்றத்தூரில் சேக்கிழார் விழா 13
குலசேகரரும் திருவரங்கனும் - முனைவர். ஏ.பரந்தாமன் 14
அருள்மிகு நடராசர் 108 போற்றிகள் 18
திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில்
நூதன இராஜகோபுரக் குடமுழுக்கு விழா 20
"பசுக்களின் தாய்வீடு" ஆமாத்தூரர் அபிராமேச்சரம்
பனையபுரம் அதியமான் 22
உலகம் உய்ய உதித்த உடையவர் - பெ.இராமநாதபிள்ளை 25
பிரார்த்தனை - தென்னம்பட்டு ஏகாம்பரம் 30
சிறந்த செல்வம் - திருமுருக கிருபானந்த வாரியார்
சுவாமிகள் நினைவலைகள் 32
திருவான்மியூர், அருள்மிகு மருந்தீசுவர் திருக்கோயில் 37




சொர்ணக்கிளியாள்

# அம்மன் அடியார்கள்

1823ல் தோன்றி 1874ல் தன்னை இறைவனோடு இணைத்துக் கொண்டு மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற வள்ளல் பெருமான் அம்மன் அடியார்களின் குறிப்பிடத்தக்க பெருமை படைத்தவர். ஒருநாள் திருவொற்றியூரில் வடிவுடையம்மை சந்நிதியில் தன்னைமறந்து சொன்மாலை சூட்டிய வள்ளலார் வீட்டிற்கு வர மிகத்தாமதமாயிற்று, வீட்டில் எல்லோரும் கதவைத் தாழிட்டு உறங்கிவிட்டனர். வள்ளலார் திண்ணையிலேயே படுத்துவிட்டார். இரவில் அவருடைய அண்ணியார் வந்தார். கதவைத்திறந்தார். பாலும் சோறும் பரிந்தளித்தார். அருளையே உணவாக உண்ட வள்ளலார் உறங்கிவிட்டார். விடியும் நேரத்தில் மீண்டும் கதவு திறக்கப்பட்டது. அண்ணியார் வந்தார் இராமலிங்கம் இரவு சாப்பிடாமல் படுத்துவிட்டாயே அப்பா என்றார் வள்ளலாருக்குப் புரிந்தது - வந்து சோறு போட்டவள் வடிவுடை மாணிக்கம் என்று, அன்னையின் அருளை வியந்து

''அன்றொருநாள் நம்பசிகண்டந்தோ தரியாது
நன்றிரவில் சோறளித்த நற்றாய் காண்''

என்று பாடிப்பரவினார். இது போல எல்லோருக்கும் சோறு போட வேண்டுமென்று வடலூரில் அணையாத நெருப்புடன் சத்திய தருமச்சாலையை உருவாக்கினார். அப்பருக்கும் சுந்தரருக்கும் சிவபெருமான் சோறுபோட்டது போல, வள்ளலாருக்கு அன்னை பாற்சோறளித்துத் தன்னடியார் திருக்கூட்டத்தில் சேர்த்துக் கொண்டாள்.



கோவிலூர் ஆண்டவர் எனப்படும் முத்துராமலிங்க ஞான தேசிகர்

நகரத்தார் கோயில் திருப்பணிகளைத் தொடங்கப் பெரிதும் காரணமாக இருந்தவர் தமிழ்ப்பாண்டி நாட்டில் காரைக்குடியில் 1791 ஆம் ஆண்டில் தோன்றிய முத்துராமலிங்கம், தன் தந்தையாரின் வணிகத்தினை மேற்பார்வையிடச் சிக்கல் என்ற ஊருக்குச் சென்றார். அதற்கருகில் உள்ள பொருள் வைத்த சேரியில் உகந்தலிங்க ஞான தேசிகர் என்ற குருநாதர் அருளால் தன்னுடைய பதிமூன்றாவது வயதிலேயே ஞானம் பெற்றார்.

வடதேச யோகி ஒருவர் அவரைப்பார்த்து 'இவர் தட்சிணாமூர்த்தியின் கலை என்று அறியுங்கள். உங்களை. ஆட்கொள்ள ஆண்டவன் எழுந்தருளியிருக்கிறான்' என்று,




ஊர் மக்களிடம் கூறினார். அது முதல் தனவணிகர் அவரை ஆண்டவர் என்றே அழைக்கத் தொடங்கினார். ஒருநாள் ஆண்டவர்மேனியில் காய்ச்சல் உண்டாக அவர் அயர்வோடு படுத்திருக்கும்போது, அவர் முன்னால் ஒரு கன்னிப்பெண் தோன்றி 'நான் காரைக்குடியிலிருந்து உன் காய்ச்சல் நீங்கத் தீர்த்தம் கொண்டுவந்தேன்' என்று கூறினாள். ஆண்டவர் அதை வாங்கி அருந்தினார். காய்ச்சலும் மறைந்தது கன்னியும் மறைந்தாள். இதை ஆண்டவர், தன் ஆசிரியரிடம் கூற, ஆசிரியர் 'உன்னைக் காப்பாற்ற வந்தவள் காரைக்குடி கொப்புடைய அம்மை' என்று கூறினார். ஆண்டவர் அம்மையின் அருளை வியந்தது.

''உன்னைக் கதியென் றடையாமல் ஒகோ
உலக வாஞ்சையினால்
என்னே இற்றை நாள்வரைக்கும் இழிவாம்
தொழிற்கே இழுத்தல் கண்டாய்
பின்னே எனக்கோர் கதியில்லை பேசா
திருந்தால் என்செய்வேன்
அன்னே இந்த மதியகற்றாய் அம்மே
கொப்பை உடையாளே''

என்று பாடிப்பரவினார். அதன் பிறகு ஒருநாள் இரவில் மழை பெய்த நேரத்தில் ஆண்டவர் காரைக்குடிக்கு அருகில் உள்ள கோவிலுக்குச் சென்றார். அங்கு திருநெல்லை அம்மை உடனாகிய கொற்றவாளீசர் கோயில், கூரைக் கொட்டகையாக இருந்தது. இரவு முழுவதும் மழையில் நனைந்து உறங்காதிருந்த ஆண்டவர் விடிந்ததும், கூரையை மாற்றிப் பனையோலை போட எண்ணினார். தொழிலாளர்களை அழைத்தார். அவர்கள் ஏறியதும் கொட்டகை முழுவதும் அடியோடு சாய்ந்தது. இதைக் கற்கோயில் ஆக்க வேண்டும் என நினைத்த ஆண்டவர், வீடு சென்றதும் மறந்துவிட்டார். திருநெல்லை அம்மை ஒரு மங்கை வடிவத்தில் ஆண்டவரின் தாயிடம் சென்று உன்மகன் நான் இருந்த வீட்டைக் கற்கோயில் ஆக்குகிறேன் என்று சொல்லி இருந்த கொட்டகையையும் பிரித்துப் போட்டுவிட்டுப் போய்விட்டானே இது சரியா? எனக் கேட்டு மறைந்தாள். இதையறிந்த ஆண்டவர், தன் தாய் செய்த தவத்தை வியந்து, தனவணிகர்களுக்கு ஆணையிட்டு, கற்கோயில் கட்டிக் கோவிலூரில் வேதாந்த மடத்தையும் நிறுவினார். இப்பொழுது இந்த மடத்தின் தலைமைப் பீடத்திலிருந்து தவத்திரு நாச்சியப்ப ஞானதேசிய சுவாமிகள் முயற்சியில், அமெரிக்க நாட்டிலும் கோவிலூரின் கிளைமடம் அமைக்கப்பெற்றுள்ளது. இவர் ஆண்டவரின் பேரன் ஆவார்.

திருப்போரூர் சிதம்பரசுவாமிகள்

திருப்போரூர் முருகன் சந்நிதிமுறை பாடிய சிதம்பரசுவாமிகள் மதுரையைச் சேர்ந்தவர். கனவிலும் நனவிலும் கயற்கண்ணியை மறவாதவர். அன்னை அவருக்கு நாசி நுனியில் நடுவெழுந்த தீபமாய்க் காட்சி தந்தாள். ஓதுகின்ற நாவினிக்க உணரும் உளம் இனிக்க மீனாட்சியம்மை கலிவெண்பா பாடினார். அன்னை அருட்காட்சி தந்தாள். திருப்போரூருக்கு போ, முருகன் திருப்பணி செய் என்றாள். அதன்படி செங்கல்பட்டுக்கு அருகில் உள்ள திருப்போரூர் சென்று, மறைந்திருந்த முருகன் திருமேனியை வெளிப்படுத்தி, அப்பெருமானுக்கு கற்கோயிலும் கட்டிச்



சொற்கோயிலும் கட்டினார்.

குருநமசிராயர்

இவர் திருவண்ணாமலையில் வாழ்ந்தவர். குகைநமசிவாயரின் சீடர், அருமையான தமிழில் அண்ணாமலை வெண்பாப்பாடியவர். குருநாதர் கட்டளைப்படி திருவண்ணா மலையை விட்டுச் சிதம்பரம் செல்லும் போது மலையை விட்டுப் பிரிவதை எண்ணி மயங்குகிறார்.

பசி ஒரு புறம் பக்தி ஒரு புறம் என்று வாடும் குழந்தைக்கு முன்னால் உண்ணாமுலைத் தாயார் தானே எழுந்தருளித் தளிர்க்கரத்தில் சோறேந்தி, பிள்ளை அமுதருந்தப் பெருமகிழ்வு பெறுகின்றாள். இந்த அருளில் திளைத்த குருநமசிவாயர்.

''அண்ணாமலையார் அகத்துக் கினியாளே
உண்ணா மலையே உமையாளே - நண்ணா
நினைதோறும் போற்றி செய்யும்
நின்னடியார் உண்ண
மனைதோறும் சோறு கொண்டு வா.''

என்று பாடி மகிழ்ந்தார். இவரே திருவாவடுதுறை ஆதீனத்தின் முதலாவது குருவாகத் திகழ்ந்தவர்.

அழகிய சொக்கநாத பிள்ளை

திருநெல்வேலியில் அருள் மழை பொழிபவள் காந்திமதி அன்னை, அவள் மீது அழகிய சொக்கநாத பிள்ளை என்ற கவிஞர் பிள்ளைத்தமிழ் பாடுகிறார். வருகைப் பருவத்தில் அம்மா நான் அழைக்க நீ வாராதிருந்தால், இனி நான் உன் கண்ணுக்கு மை எழுத மாட்டேன். நெற்றிக்குப் பொட்டுவைக்க மாட்டேன் முகங்கொடுத்துப் பேசமாட்டேன் பாலுட்ட மாட்டேன்.

''வாராதிருந்தால் இனிநான் உன் வடிவேல்
விழிக்கு மைஎழுதேன்
மதிவாள்நுதற்குத் திலகமிடேன்
மணியால் இழைத்த பணிபுனையேன்
பேராதரத்தினொடு பழக்கம் பேசேன்
சிறிதும் முகம் பாரேன்
பிறங்கு முலைப்பால் இனிதூட்டேன்
பிரியமுடன் ஒக்கலை வைத்துத்
தேரார் வீதி வளங்காட்டேன் செய்ய
கனிவாய் முத்தமிடேன்
திகழும் மணித் தொட்டிலில் ஏற்றித்
திருக்கண் வளரச் சீராட்டேன்
தாரார் இமவான் தடமார்பில் தவழும்
குழந்தாய் வருகவே
சாலிப் பதிவாழ் காந்திமதித் தாயே வருக
வருகவே''

என்று பாடியதும் அன்னை காந்திமதி குழந்தை வடிவில் தவழ்ந்தோடி வந்து மடியில் அமர்ந்தாள். பாடிய கவிஞரும் பாடஉதவிய வள்ளல் முத்துசாமியும் தன்னை மறந்து வணங்கி நிற்கத் தமிழ் கேட்ட தாய் மறைந்தாள். வள்ளல் தன் காதில் இருந்து விலை மதிப்பில்லாத வைரக் கடுக்கனைக்கழற்றிக் கவிஞருக்குத் தானே அணிவித்து வணங்கினார். அருந்தமிழ் பாடினால் அன்னை வருவாள் என்பதை உலகம் அறிந்து கொண்டது.

திருநெல்வேலி காந்திமதி அம்மையின் அடியார் கூட்டத்துக்குக் கணக்கில்லை அவர்கள் பாடிய பாடல்களும் பெரிதும் போற்றத்தக்கவை.

காந்திமதி அம்பிகை மாலையில் ஒரு அடியார் கேட்கிறார். அம்மா பிள்ளை அழுதால் தாய் பொறுக்கமாட்டாளே இது என்னளவில் பொய்யானதோ?

''பிள்ளை அழும் குரலைப் பெற்றவள் கேட்
டால்சகியாள்
எள்ளளவும் என்ற சொல்லும் என் மட்டும்
ஏன் இல்லையம்மா?
தள்ளிவிட்டால் வேறெனக்குத்தாரகம் இங்கு
யாருமுண்டோ?
கள்ளவிழும் பூங்கோதைக் காந்திமதி
அம்பிகையே''

என்று பாடும் குரல்கேட்டால் அந்தத் தாய் ஓடிவரமாட்டாளா? அப்படி வந்தால் அவளிடம் என்ன கேட்பது அம்மா! இரவு நேரத்தில் முத்துப்பந்தலில் அமர்ந்து நீ முத்தம் தா என்று சிவபெருமான் உன்னிடம் கெஞ்சுவார் அல்லவா அந்த நேரம் பார்த்து மெதுவாக என்குறைகளை எல்லாம் சொல்லக் கூடாதா? சொன்னால் உன்வாயில் உள்ள முத்து கொட்டிவிடுமா?

''ஆய் முத்துப் பந்தரின் மெல்லணைமீது உன்
அருகிருந்து
நீ முத்தம் தா என்று அவர் கெ(ா)ஞ்சும்
வேளையில் நித்தநித்தம்
வேய்முத்தரோடு என் குறைகள் எல்லாம்
மெல்ல மெல்லச் சொன்னால்
வாய்முத்தம் சிந்தி விடுமோநெல் வேலி
வடிவம்மையே''

என்று கேட்கிறார் அந்தப் புலவர். அம்மன் அடியார் திருக்கூட்டத்தில் இவரைச் சேர்க்காமல் இருக்கலாமா?

பலபட்டைச் சொக்கநாதப் புலவர்

இவர் திருமலை மன்னன் அவைப்புலவர், மதுரை மீனாட்சியின் மீது தனிப்பாடல்கள் பாடியவர். 'சிவபெருமான் யானையை உரித்தவன், புலித்தோல் போர்த்தவன் பாண்டியனால் அடிப்பட்டவன் இரந்துண்பவன். ஆனால் மதுரையில் ஞானமிகப் பெற்றவனாய் இருக்க என்ன காரணம்? சொக்கி என்ற பானை பிடித்தவள் பாக்கியமல்லவா

''ஆனை உரித்தும் அதள் அதனைப்
போர்த்திட் டடியும்பட்டு
மானம் அழிந்தங் கிரந்தே திரிந்த மதுரைச்
சொக்கர்
ஞானம் மிகப்பெற்று வாழ்வதெல்லாம்
சொக்க நாயகியாள்
பானை பிடித்த முகூர்த்தத்தினால் வந்த
பாக்கியமே''

என்று பாடுகிறார் இப்புலவர்.



படிக்காசுப் புலவர்

அம்மா! முருகனுக்கு வேல் தந்தாய், சிவபெருமான், அம்மியின் மீது வைக்கக் கால்தந்தாய், சம்பந்தருக்குப் பால் தந்தாய். காமனுக்கு மூவரும் அஞ்சக் கோல் தந்தாய் எனக்கென்ன தந்தாய் என்று கேட்டு அம்மையுடன் பேசியவர் படிக்காசுப் புலவர்.

வேல் கொடுத்தாய்; திருச்செந்தூரர்க்கு; அம்மியின் மீதுவைக்கக்

''கால் கொடுத்தாய் நின்மண வாளனுக்கு;
கவுணியர்க்குப்
பால்கொடுத்தாய்; மத வேளுக்கு மூவர்
பயப்படச் செங்
கோல் கொடுத்தாய் அம்மையே
எனக்கேதும் கொடுத்திலையே''

என்பது அவர் பாடல்.

கவிராச பண்டிதர்

ஆதி சங்கரரின் சௌந்தர்ய லகரியைத் தமிழில் பாடியவர் இவர். இப்புலவர் காசியாத்திரை சென்ற பொழுது இவர் மகள் போல உருக்கொண்டு மீனாட்சியம்மையும் சென்றாள். தந்தைக்குப் பணிவிடை செய்து தமிழ் கேட்டாள் மதுரை வந்ததும் தன்னை மறைத்துக் கொண்டாள். மலயத்துவசன் பெற்ற பேறு வண்டமிழ்ப் புலவர்க்கும் கிடைத்தது. அன்னையின் அருளுக்கு எல்லை இல்லையே.

**பொற்கிளிக் கவிஞர்**
**சொ.சு.மீ. சுந்தரம்**

# மாணிக்கவாசகரின் வாசகமும் கோவையும்




திருவாசகத்தின் சிறப்பு: திருவாசகம் ஒப்புயர்வற்ற ஒரு தோத்திரப் படைப்பு. சிவப்பிரகாசர் கூறுவது போல். அதில் காணப்படுவது 'கன்னித்தமிழ்' அழுது, தொழுது அடம் பிடிக்கும் குழந்தையே போன்று, திருப்பெருந்துறை சிவபெருமானோடு உறவாடும் அடிகளாரின் படைப்பாகிய திருவாசகம், தொகுப்புக்களால் ஆனது, ஆட்கொண்ட சிவபெருமானை விட்டுப் பிரிந்ததால் 'வருந்தி உரைத்தவை' ஒரு பகுதி; கடையனான தன்னையும் ஆட்கொண்ட பரம்பொருளின் கருணையை நினைத்து 'உருகி உரைத்தவை' பிரிதொரு தொகுதி.

இறைவனின் வரிவடிவமே ஓங்காரம், ஒலி வடிவமே நாதம், ஒலியுடன் கூடிய மறைமொழி வடிவமே திருவாசகம், இறைவன் வேறு, திருவாசகம் வேறு அல்ல.

படைக்கப்படும் நூலின் முதல் அடியை எடுத்துத் தருவது போலன்றி, நூல் ஆசிரியரைப் பாடச் சொல்லி அந்நூலையே தம் திருக்கையால் திருக்கூத்தன் எழுதி அருளிய திருவாசகம் இணையில்லாப் பெருமையை உடைத்து.

''ஊழி முடிவில் தமது தனிமையைப் போக்கவே திருவாசகத்தை இறைவன் தம் திருக்கையால் எழுதி வைத்துக் கொண்டான்'' என்று மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்கள் கூறியுள்ளது திருவாசகத்திற்குக் கிடைத்துள்ள பெறற்கரிய பெருமை அன்றோ!

'பா' என்ற ஓரெழுத்துச் சொல்லே திருவாசகத்தைக் குறிப்பிடுகிறது. இந்நூலில் பல சாத்திரக் கருத்துகளும் உள. முப்பொருள்கள், மும்மலங்கள், மூலகன்மம், இறையின் வியாபகத்தன்மை, உயிர்களோடு ஒன்றாய், உடனாய், வேறாய் இருக்கும் இறைவனின் இயல்பு, முக்தியில் உயிர் சிவமாம் தன்மை பெறுதல் ஆகிய சாத்திரக் கருத்துக்களும் திருவாசகத்தில் பேசப் படுகின்றன.

இது ஒரு அருள் நூல்- அனுபவ நூல் - மெய்ஞ்ஞான

**சேத்துப்பட்டு சித்தாந்த இரத்தினம்**
**டாக்டர் எம்.ஆர். சந்தானம்**

விளக்க நூல். முதல் நான்கு நெடும்பாடல்கள் பிரம்ம சூத்திரத்தின் முதல் நான்கு சூத்திரங்களுக்கான விளக்கமே, மேலும், அவை திருக்குறளில் உள்ள கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய நான்கு அதிகாரங்களைப் போன்று திருவாசகத்தில் பாயிரமாக அமைந்துள்ளன.

திருவாசகத்தில் முதற் பதிகமாகிய சிவபுராணம், 'நமசிவாயப் பொதுமை பெருநெறி' யையும் 'சிவாயநமச் சிறப்புப் பெருநெறி' யையும் கோடிட்டுக் காட்டுகின்றது. முன்னது, சகலர்க்குரிய, முயன்று, முயன்று இறைவன் திருவடிப்பேற்றினை அடையும் நெறி, பின்னது, பக்குவமுற்ற அருளாளர்கட்கு, பரம்பொருள் தாமே குருவடியில் எழுந்தருளி திருவடிப்பேற்றை வழங்கி ஆட்கொள்ளும் நெறி- மணிவாசகர் பெற்ற நெறி.

''நானேயோ தவம் செய்தேன், சிவாய நம எனப்பெற்றேன்'', தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச் சங்கரா'' என்பவை அடிகளாரின் திருவாக்குகள்.

''ஆரண மொழி (வேதங்கள்)யை விட வாதவூரரின் திருவாசகத்தேனே அல்லவா கேட்போரையெல்லாம் உருக வைக்கக் கூடியன'' என்று வியக்கிறார் நால்வர் நான்மணி மாலையில் சிவப்பிரகாசர், அவர் கையாண்ட மற்றொரு உருவகத்தில் புகழேணியின் உச்சிக்கே எடுத்துச் சென்று விடுகிறார் இவ்வருள் நூலை. ''மாணிக்கவாசகர் என்ற மேகம்'' சிவம் என்னும் கருணைக் கடலை திருப்பெருந்துறையில் புகுந்து, முகந்து, திருவாசகம் என்ற மழையைப் பெய்தது, இம்மழை வெள்ளம் ஓதுபவரின் உள்ளமாகிய ஏரியில் நிரம்பி, வாய் என்ற மதகின் வழி வெளியேறிக் கேட்போரின் செவியாகிய மடைகளில் போய், அவர்தம் நெஞ்சமாகிய நிலத்தில் பாய, அங்கே ஊன்றப்பட்ட அன்பு என்ற விதையில், சிவம் என்ற சிறிய முளை தோன்றி வளர்ந்து முத்தி என்ற உண்மைப் பயனை அளிக்க வல்லது இந்நூல்'' என்கிறார் சிவப்பிரகாசர்.

மூவர் முதலிகளின் தேவாரத்தில் கூறப்படாத பல சிவலீலைகள் திருவாசகத்தில் பேசப் படுகின்றன. இறைவன் உமையம்மைக்கு ஆகமங்களை உபதேசித்தது. கடலில் மீன்பிடிக்க வேடனாகச் சென்றது. மண்டோதரிக்கு அருள் புரிந்தது.

பன்றிக்குப் பால் கொடுத்தது முதலியவை இதில் அடங்கும் மேலும் பொற்சுண்ணம் இடித்தல், பொன்னூசல் ஆடல், உந்தீபற ஆகிய பாடல்கள் சிறுமியர் பாடுவதாக அமைந்துள்ளன.

வேதங்களைக் காட்டிலும் உயர்ந்தது திருவாசகம் என்று சொல்ல வந்த சிவப்பிரகாசர் ''மண்கலத்தை ஒக்கும் வேதங்களை ஓதினால் கிடைப்பது வெறும் சொர்க்கம் முதலிய பதங்களே; ஆனால், பொன்கலத்தை ஒக்கும் திருவாசகத்தை ஓதினால் கிடைப்பதோ பெறற்கரிய முக்திப் பேறு எனப்படும் வீடுபேறு'' என்கிறார்.

இனி, திருக்கோவையாரைச் சிறிது சிந்திக்கலாம்.

திருக்கோவையாரின் சிறப்பு:

மணிவாசகப் பெருந்தகை அருளிச்செய்த மற்றுமொரு அருள் நூல் 'திருக்கோவையார்,' நானூறு பாடல்கள் கொண்ட இந்நூலில் அகப்பொருளே பேசப்படுகிறது. இந்நூலில் உள்ள திருப்பாடல்களுக்குப் பேரின்பப் பொருள் கூறுபவர்கள். இறைவனைத் தலைவியாகவும், ஆன்மாவைத் தலைவனாகவும் கொண்டே விளக்கம் கூறுகிறார்கள். இத்தகைய விளக்கத்தை ஏற்புடைய ஒன்றாகக் கருதவில்லை அறிஞர்கள் பலர், இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் நாயக - நாயகி பாவம் கூறுவது வைணவத்தில் உண்டு. சைவத்தில் அது இல்லை என்ற கோட்பாட்டை வலியுறுத்தியதே திருவெம் பாவையும், திருக்கோவையாரும். திருவாசகத்தில் ஏழாவது பதிகமாகிய திருவெம்பாவையில் கன்னிப் பெண்கள் எழுப்பப்படுகிறார்கள். சிவனடியார்களே தமக்குக் கணவர்களாக வரவேண்டல் காணப்படுகிறது. திருக்கோவையாரில் முத்தான்மா நாயகனாகவும் அருட்சக்தி நாயகியாகவும் பாடப்படுகிறது என்பது அறிஞர்கள் தரும் விளக்கம்.

திருக்கோவையாருக்குள்ள தனிச்சிறப்பு, மதுரை சோமசுந்தரக் கடவுள் 'தண்ணார்த் தமிழில்' அருளிச் செய்த 'இறையனார் களவியல்' என்ற அகத்திணை இலக்கண நூலுக்கு இலக்கியமாக அமைந்ததேயாகும்.






இது சிவபெருமானின் திருவுளம் பற்றியே அமைந்த ஒன்றாகும். ''பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' என்று பணித்தார் இறைவன். இறையனார் களவியலில் அறுபது சூத்திரங்கள் வாயிலாக சைவக் கன்னிப் பெண்களின் இயல்புகள் விளக்கப்படுகின்றன. காதல் வயப்பட்டப் பின்னர் அக்கன்னிப் பெண்களின் இயல்புகள் அன்றோ அவர்களின் வாழ்வை திருமணம் வழியாக நிறைவு செய்யும்! ஆகவேதான், தருணம் பார்த்து, சைவ மெய்ஞ் ஞானியான மணிவாசகரைக் கொண்டு 'கோவை' யைப் பாடவைத்தார் இறைவன். ஆகவே ஒரு வகையில் 'பாவை' யை நிறைவாக்கும் (Complement) நூலே 'கோவை' எனலாம். 'சதகம்' முதல் காப்பியம் ஈறாகச் சொல்லப்படும் 96 வகைப் பிரபந்தங்களில் கோவையும் ஒன்று, சித்திரக்கவிக்கு சம்பந்தரும், தாண்டகத்திற்கு நாவுக்கரசரும், அந்தாதிக்குக் காரைக்கால் அம்மையாரும், உலாவுக்குச் சேரமான் பெருமாள் நாயனாரும் மூல இலக்கியம் கண்டதுபோன்று கோவைக்கு மூல இலக்கியம் கண்டவர் மணிவாசகர் பெருமான்'

மார்கழித் திருவாதிரையை ஈறாகக் கொண்ட பத்து நாள் திருவெம்பாவை நோன்பாகக் கொண்டாடப்படுகிறது. அந்நாளில் மற்ற திருமுறைகளை ஓதாமல் திருவாசகத்தை மட்டுமே ஓதுவது மரபு, திருவாவடுதுறை ஆதீனத்தில் ஒவ்வொரு நாளும் நடராசப் பெருமான் பூசையின் போது திருக்கோவையார் ஓதப்படுகிறது குறிப்பிடத்தக்கதாகும்..

மணிவாசகரின் பெருமை:

சமயக்குரவர்கள் நால்வரில் ஒருவராக வைத்துப் போற்றப்படுபவர் அடிகளார், சிவபெருமானே அடிகளாரைத் தொண்டராகப் பெறும் பொருட்டு நரிகளைப் பரிகளாக்கினார், வந்தி மூதாட்டியின் கூலியாளாய் மண் சுமந்தார். பாண்டியனிடம் பிரம்படியும் பட்டார்.

முத்திப் பேற்றிற்கான மார்க்கத்தில் குருவின்பங்களிப்பு சைவத்தில் வற்புறுத்தப்படுகிறது. மாணாக்கன் குருவைத் தேடிச் செல்லுதலே உலகியல் வழக்கு. மாறாக, ஆன்மிகத்தில், உரிய நேரத்தில் பக்குவப்பட்ட ஆன்மாவிற்குக் குருவே எதிர்ப்பட்டு சீடனை ஆட்கொள்ளுகிறான். இந்த வகையில், குருவருளும், இறையருளும் ஒருங்கே கிடைக்கப்பெற்ற மணிவாசகப் பெருமானின் பேறு சிறப்பு மிக்கது. மூவர் முதலிகளான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரை ஆட்கொள்ளச் சிவபரம்பொருளுக்குத் தேவைப் பட்டவை பாலும், சூலையும், ஓலையுமே, வாதவூர் அடிகளை ஆட்கொள்ளத் தாமே குருவாக திருவுருக்கொண்டு திருப்பெருந்துறைக் கோயில் குருந்தமர நிழலில் எழுந்தரு ளியிருந்து அடிகளாருக்கு நயனத்தீக்கையும் திருவடித் தீக்கையும் தந்தருளினார். இதுவே மணிவாசகப் பெருமானுக்குள்ள தனிச்சிறப்பு ஆகும். இதுவன்றோ சிவஞானிகளுக்கு பெறற்கரிய பேறு.



திருவாசகம் மற்றும் திருக்கோவையார் ஆகிய இரு நூல்களைப் பற்றிய பெருமைகளை விரிக்கின் பெருகும். அவற்றை அருளிய அருளாளர் மணிவாசகப் பெருமானின் அருமை, பெருமைகளும் அளவிலடங்கா.

அறுபத்திமூன்று நாயன்மார்கள் அனைவரும் தத்தம் வாழ்வாலும், வாக்காலும் சிவனையே சிந்தித்து சிவனடி சேர்ந்தவர்கள். நாயன் மார்களின் சிலரே இயல், இசைத் தமிழில் வல்லவர்களாக இருந்தனர். தேவார மூவரும் காரைக்கால் அம்மையாரும் இயல் இசையில் வல்லவர்கள், திருநாளைப் போவார், திருநீலகண்டத்து யாழ்ப்பாணர், ஆனாயனார், பரமனையே பாடுவார் ஆகியோர் இசைத் தமிழில் புலமை பெற்றவர்கள், ஐயடிகள், திருமூலர், காரியார், பொய்யடிமையில்லாப் புலவர், சேரமான் பெருமாள் நாயனார் ஆகியோர் இயற்றமிழில் வல்லவர்கள், இவர்களின் பக்தி நெறி வெளிப்பாட்டிற்குத் தமிழ் மொழி துணை நின்றது. இதனால் மக்களிடையே பக்தி நெறியும், தமிழ் மொழியில் பக்தி இலக்கியமும் பெருகின.

குறிப்பிடத்தக்க மொழிப்புலமை ஏதும் இல்லாமலேயே, சிவ பக்தியும், சிவனடியார் மீது அன்பும் மட்டுமே கொண்டு, வாழ்வாங்கு வாழ்ந்து சிவனடி சேர்ந்த நாயன்மார்களும் அறுபத்தி மூவரில் அடங்குவர். இத்தகைய பின்னணியில் நோக்குகையில் சைவ தோத்திர நூல்களிலேயே தனிப்பெரும் இடம் பெற்றுள்ள திருவாசகத்தை அருளிய மணிவாசகப் பெருமான் 'அறுபத்தி மூன்று' கணக்கில் ஒருவராக சேர்க்கப்படாதது நம் துரதிர்ஷ்டமே. மணிவாசகர் தோன்றிய காலம் ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னரே என்ற நிலைப்பாட்டை மேற்கொண்டு, 'திருத்தொண்டத் தொகை'க் காலமாகிய எட்டாம் நூற்றாண்டில், பின்னர் தோன்றவிருக்கும் மணிவாசகப் பெருமான் பாடப்படாதது இயற்கையே அன்றோ என்பார் சிலர்.

மீண்டும் சர்ச்சையை நினைவு கூறவேண்டாமே, ஒரு வாதத்திற்காக, மேற்குறிப்பிட்ட நிலைப்பார்ட்டை ஒப்புக் கொண்டதாகவே இருக்கட்டும். அதனால், திருவாசகத்திற்கோ, கோவைக்கோ அவற்றை இயற்றிய அடிகளாருக்கோ என்ன குறை நேர்ந்துவிடும்? அடிகளாரின் காலம் ஆறு நூற்றாண்டுகட்குப் பின்னராகவே இருக்கட்டும். காலம் என்ன செய்துவிட முடியும்? படைப்புகளின் சிறப்புகளும் படைப்பாளியின் பெருமைகளும் அன்றோ பேசப்படவேண்டியவை. படைப்பாளி கணக்கில் வராவிட்டால் என்ன? கணக்கிலடங்கா அளவிற்கு அன்னாரின் படைப்புகள் நன்மைகள் பயக்கின்றனவே, இது போதாதா, வரலாற்று ஆய்வாளர்கள் நீங்கலாக, சராசரி சைவர்கள் அமைதியடைய.

# குன்றத்தூரில் சேக்கிழார் விழா

தெய்வப் புலவர் சேக்கிழார் திருஅவதாரம் செய்த ஊர் குன்றத்தூர். அங்கு அவரை தெய்வமாகவே வழிபடுகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் இந்து சமய அறநிலைய துறை சார்பில் சேக்கிழார் விழா கடந்த 24 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது.

01.06.2008 ஞாயிற்றுக் கிழமையன்று மாலை 4.00 மணிக்கு சேக்கிழார் அவதரித்த தலத்திலிருந்து சேக்கிழாரின் திருவுருவச் சிலை ஓதுவா மூர்த்திகள் பண்ணிசை பாட, மேள நாதஸ்வரம் இசை ஊர்வலம் துவங்கி, அவர் காட்டிய திருநாகேஸ்வர சுவாமி கோயிலை அடைந்தது. அங்கு அவருக்கு பூரண கும்பமரியாதை செய்து அழைத்துச் செல்லப்பட்டு மீண்டும் அங்கிருந்து புறப்பாடு நடைபெற்று திருக்கோயிலுக்குத் திரும்பினார்.






திருநாகேஸ்வரம் கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சங்கத்தின் திருமண மண்டபத்தில் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழால் சேக்கிழார் பெருமை, பெரிய புராணம், தேவாரத்தின் சிறப்பு ஆகியவை எடுத்துரைக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் சென்னை இணை ஆணையர் திரு.ப. தனபால் அவர்கள், கலந்து கொள்ள வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

தொடர்ந்து பேராசிரியர் அரங்கராமலிங்கம் அவர்கள் நாயன்மார்களின் பாடல்கள் அவர்களின் சிறப்பு ஆகியவற்றை எதிரில் கலந்து கொள்ள வந்திருந்த சிறுவர்களும் ஈடுபட்டு பதில் கூறும் வகையில் வினா விடை நிகழ்ச்சிபோல் நிகழ்த்தி சொற்பொழிவாற்றினார்.

தேவாரப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட மாணவ மாணவிகளைப் பாடச் சொல்லி தேர்வு செய்து பரிசுப் பொருட்களை வேலூர் மண்டல இணை ஆணையர் திரு.கோ.பக்கிரிசாமி அவர்கள் வழங்கினார்.

தொண்டை மண்டல ஆதீனம் சீர்வளர்சீர் ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையைத் தொடர்ந்து.

''இறைவன் ஈசனே'' என்னும் தலைப்பில் பெரியபுராணம் தேவாரம் ஆகியற்றிலிருந்து பாடல்கள் பாடி நடித்து அபிநயித்து கண்முன்னே கொண்டு வந்து காட்டிய கமலா குழுவினரின் இசை நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவிற்கான ஏற்பாடுகளை காஞ்சிபுரம் உதவி ஆணையர் திரு. நாராயணசாமி அவர்கள், தக்கார் திரு. பாலாஜி, செயல் அலுவலர் திரு. அருணாசலம் ஆகியோர் சிறப்புறச் செய்திருந்தனர்.

வடபழனி ஆண்டவர் திருக்கோயில் துணை ஆணையர்/செயல் அலுவலர் திரு.பி.வாசுநாதன், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திருக்கோயில் துணை ஆணையர் திரு. பொ.ஜெயராமன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# குலசேகரரும் திருவரங்கனும்



மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுள் சேர மன்னராக விளங்கிய ஸ்ரீ குலசேகராழ்வார் அரசாட்சியை வெறுத்து, திருவரங்கனைக் கண்டு வணங்கி வழிபடும் நாளை மிகுந்த ஆவலுடனும் வேட்கையுடனும் எதிர்நோக்கி இருந்தார்.

குலசேகரனின் திருமால் பக்தியையும் திருமால் அடியார்கள் மீது கொண்ட பக்தியையும் கண்ட அமைச்சர் பெருமக்கள் அரசரை அரண்மனையை விட்டு வெளியே அனுப்பினால் மீண்டும் நாடுதிரும்ப மாட்டார் என எண்ணினர். மன்னர் மறுநாள் திருவரங்கத்திருப்பதிக்கு செல்ல திட்டமிட்டார். மன்னர் அரண்மனையை விட்டு புறப்படும்போது, எதிரே பல திருமால் அடியார்கள் வரும்படி ஏற்பாடு செய்தனர். திருமால் அடியார்களைக் கண்டதும் அவர்களை வணங்கி வரவேற்று அரண்மனைக்கு அழைத்துச் சென்று உபசரித்தார். இப்படியே பல நாட்கள் நடந்ததால், மன்னருக்குத் திருவரங்கனைக் காணவேண்டுமென்ற ஏக்கம் அதிகரித்தது, இதனைத்தெலுங்கு மொழியில் "தினே தினே ஏங்க யாத்திரை" என்பர் குலசேகராழ்வார் தமது ஆவலைப் பத்து பாசுங்களில் வெளியிடுகின்றார்.

கண்ணினைகள் என்று கொலோ களிக்கும் நாளே

எம்பெருமான் திருமாலுக்குத் தொண்டாற்றும் ஆறறிவுடைய மக்களைவிட, மூன்றறிவுடைய அனந்தாழ்வானும், நாலறிவுடைய கருடாழ்வாறும் ஐயறிவுடைய பசுக்களும் பெரும்பங்கு கொண்டுள்ளன.

அரவரசனாகிய அனந்தாழ்வார் தன் படாமுடிகாடுல் உள்ள ரத்தினக்கற்களால் ஒளிவீசும்படி படுக்கையாக திருவரங்கனுக்கு இருந்து வருகின்றன.

''பூம்பட்டாம்புல்கு அணையாம் திருமாற்கு அரவு'' எனும் பொய்கை ஆழ்வார் அருளிச்செயல் இங்கு காணத்தக்கதாகும். இவ்வண்ணம் திருவரங்கத்தில் திருமால் பள்ளி கொண்டுள்ளான். காவிரிதன் திரைக்கைகளால் எப்பொழுதும் திருவரங்கன் திருவடிகளை வருடிக்கொண்டிருக்கும். அசித்துப் பொருளாகிய காவிரி நீர் கூட திருமாலுக்குத் தொண்டு செய்கின்றனவே!

கரிய நீல நிறமும் ரத்தினக்கற்கள் போன்று ஒளிவீசும் கோமளனாகிய திருவரங்கனை, அடியேன் இருகண்களும் குளிரும் படியாக என்று நான் கண்டு மகிழ்வேனோ!

கண்படைத்த பலன் திருவரங்கனைக் கண்டு களிப்பதற்குத்தானே! யான் அப்பேற்றை என்று பெறுவேனோ என்று ஏங்குகின்றார்.

''அமுதனைக் கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணவே'' எனும் திருப்பாணர் பாசுரம் இங்கு நோக்கத்தக்கதாகும்.


இருளிரியச் சுடர் மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி யணிபணம் ஆயிரங்களார்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்
அணிவிளங்கும் உயர் வெள்ளை
அணையைமேவி
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப்
பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி
கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டு
என்
கண்ணினைகள் என்று கொலோ
களிக்கும்நாளே''

(பெருமாள் திருமொழி 1-1)

வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே

அரவரசன் தன் ஆயிரம் படாமுடிகளாலும், தனது வெண்மையான மென்மையான உடலாலும் திருவரங்கனுக்குப் படுக்கையைத்தந்து, சிறந்த ஒளியையும் வீசிக் கொண்டிருக்கின்றான்.

அப்படுக்கையில் காயம்பூ நிறத்தையுடைய கருமுகில் வண்ணன் பள்ளிகொண்டுள்ளான். அத்தகைய சிறப்பு வாய்ந்த திருவரங்கனைக்கண்டு வணங்க, திருவரங்கம் சென்று, அவன் கருவறையின் முன்னே உள்ள மணத்தூண்களைப் பற்றிக்கொண்டு, கண்டுகளித்து அடியேன் வாய்




ஆரும்படி அவனை வாழ்த்தும் நாள் எந்நாளோ! வாய்படைத்த பயன் அவனைப் பாடிப்பரவி, வாழ்த்துவதுதானே, அப்பேற்றினை என் வாய் என்று பெறுமோ' என்று ஏங்குகின்றார்.

''வாயோரீரைஞ் நூறு துதங்கள்ஆர்ந்த
வளையுடம்பின் அழல் நாகம் உமிழ்ந்த
செந்தீ
வீயாத மலர்ச் சென்னி விதானமே போல்
மேன் மேலும் மிக எங்கும் பரந்ததன் கீழ்
காயம்பூ மலர்ப் பிறங்கள் என்ன மாலை
கடியரங்கத்தரவனை யில் பள்ளி
கொள்ளும்
மாயோனை மணத்தூணே பற்றி நின்று
என்
வாயார என்று கொலோ வாழ்த்தும்
நாளே!

(பெருமாள் திருமொழி - 1-2)

அடியவரோடு என்று கொலோ அணுகும் நாளே!

திருவரங்கன், கொப்பூழில் தாமரைக்



கொடியைக் கொண்டு, அதன் தண்டின் மேல் மலர்ந்த தாமரைமலரில் நான்முகனைத் தோற்றுவித்து, அவன் மூலம் இந்த உலகங்களையும், உலக உயிர்கள் அனைத்தையும் தோற்றுவித்தான்.

''உய்ய உலகு படைக்க வேண்டி உந்தியில்
தோற்றினாய் நான்முகனை''
(பெரியா, திருமொழி 4-10-5)

நான்முகன் தன் நான்கு நாவினாலும் போற்றித் துதிக்க, திருவரங்கத்தில் திருவரங்கன் பள்ளி கொள்கின்றான். திருவரங்கன் திருவடிகளில் மனம்மிக்க மலர்களை இட்டு, திருமால் அடியார் குழாங்களோடு, மனமுவந்து, இருந்து வழிபடும் நாள் எந்த நாளோ என்று ஏங்குகின்றார் குலசேகராழ்வார்.

இப்பாசுரத்தில் எம்பெருமானைத் தனியொருவராக இருந்து வணங்குவதில் சிறப்பில்லையென்பதையும், குழாங்களோடு கூடி வணங்குவதையே திருமால் மிகவும் விரும்புவார் என்பதையும் குறிப்பினால் உணர்த்துகின்றார் குலசேகராழ்வார் இங்கு ''கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பவாய்'' எனும் ஆண்டாள் திருப்பாவை காணத்தக் கதாகும்.

''எம்மாண்பின் அயன் நான்கு நாவினாலும்
எடுத்தேத்தி ஈரிரண்டு முகமும் கொண்டு
எம்மாடும் எழிற்கண்கள் எட்டினோடும்
தொழுதேத்தி இனதிறைஞ்ச நின்ற -
செம்பொன்
அம்மான்தன் மலர்க்கமலக் கொப்பூழ்
தோன்ற
அணியாங்கத்து அரவணையில் பள்ளி
கொள்ளும்
அம்மான்தன் அடியினைக்கீழ் அலர்கள்
இட்டு
அடியவரோடு என்று கொலோ அணுகும்
அங்கு நாளே

இப்பாசுரத்தில் கால்கள் படைத்த பயன் திருவரங்கம் செல்ல வேண்டுமென்பதையும், கைகள் படைத்த பலன் திருவரங்கன் திருவடிகளில் மலர்களை இட்டு வணங்க வேண்டுமென்பதையும் குலசேகராழ்வார் எடுத்து இயம்புகின்றார் கால்களால் திருவரங்கன் திருக்கோயிலை நாம் சுற்றிவலம் வந்தால் நமது துயரங்கள் விரைவில் கெடும்

''சுற்றி நாம் வலம் வந்தால் நம்துயர் கெடும் கடிதே'' எனும் அருளிச் செயல் இங்கு காணத்தக்கதாகும்.

(தொடரும்)

முனைவர். ஏ. பரந்தாமன்,
தாம்பரம்


திருக்கோயில்

திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்
விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
என்ற முகவரிக்கு அனுப்பவும்

# சிவநேய அன்பர்களுக்கு

ஸ்ரீ அறுபத்து மூவர் சமரச சன்மார்க்க சபை வெட்டுவானம் வேலூர் மாவட்டம்



அமர்நீதி நாயனார் - ஆனி - பூரம்

சிவனடியார்க்குக் கோவணம் வழங்கித் தொண்டு செய்தவர். சிவபெருமானே ஒரு அடியாராக வந்து கோவணம் ஒன்றைக் கொடுத்து பாதுகாக்கச் சொன்னார். பிறகு அது இறையருளால் மறைந்தது. சிவனடியார் மீள வந்து, தாம் கொடுத்த பழைய கோவணத்தை கேட்டார். அதற்கு ஈடாக தமது செல்வத்துடன், மனைவி, மக்களுடன் தராசில் ஏறி நின்று, உடல், பொருள், ஆவி மூன்றும் சிவனடியார்களுக்கே என்பதை வெளிப்படுத்தினார். இவருக்கு இறைவன் அருள் பாலித்தார்.

ஸ்ரீ அறுபத்து மூவர் சமரச சன்மார்க்க சபை வெட்டுவானம் வேலூர் மாவட்டம்




சிவசக்தி அறுபத்துமூவர் கயிலாய காட்சி

தோடுடைய செவியன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் அன்றே

வெட்டுவாணம் ஸ்ரீ அறுபத்து மூவர் சமரச சன்மார்க்க சபையில் அறுபத்து மூன்று நாயன் மார்களின் திருவுருவப் படங்கள் வாழ்க்கை நிகழ்ச்சியை ஒட்டிய நிலையில் வண்ண ஓவியங்களாக கண்ணாடியில் வரையப் பட்டுள்ளன. அவ்வண்ண ஓவியங்கள்எக்காலத்தைச் சேர்ந்தது என அறிய இயலாவாயின இவ்வண்ண ஓவியங் களைக் கணினி முறையில் வண்ணம் மாறா வண்ணம் அச்சிட்டு ''சிவனருட் செல்வர்'' எனும் நூல் வடிவில் மெய்யன்பர்க்கு அருள வேண்டும் என்ற ஆடல் வல்லான் திருஉளத்தின் அருள் வண்ணம் வெளியீடு செய்ய உள்ளது 100 வண்ணப் படங்களுடன் - சபையின் வரலாற்று செய்தி - அடியார்கள் பெருமை - இன்னும் பல சிறப்புகளுடன் டெம்மி 1/8 அளவில் நூல் திகழ்கின்றது. இந்நூல் பதிப்பு செலவு ரூ. 120/- இருப்பினும் சிவநேயச் செல்வர்களின் திருக்கரங்களில் இந்நூல் இருக்கச் செய்ய இறையருள் கூட்டிய வண்ணம் ரூ. 100/-(நூறு மட்டும்) பெற்று வழங்க உள்ளனர். அன்பர்கள் பயன்பெற வேண்டுகிறோம்.

தொடர்பு முகவரி:
ஸ்ரீ அறுபத்து மூவர்
சமரச சன்மார்க்க சபை
வெட்டுவாணம்-635 809
வேலூர் மாவட்டம்.

# அருள்மிகு நடராசர் 108 போற்றிகள்



1. ஓம் அசபா நடத்தாய் போற்றி!
2. ஓம் அட்ட மூர்த்தியே போற்றி!
3. ஓம் அடல்விடைப் பாகா போற்றி!
4. ஓம் அண்டமுற ஆடுவாய் போற்றி!
5. ஓம் அந்தி பகல் ஆடுவாய் போற்றி!
6. ஓம் அம்பலத் தரசே போற்றி!
7. ஓம் அமரர்க் கரியாய் போற்றி!
8. ஓம் அற்புதக் கூத்தா போற்றி!
9. ஓம் அனலேந்தி ஆடுவாய் போற்றி!
10. ஓம் அனவரதக் கூத்தா போற்றி!
11. ஓம் ஆடல் வல்லானே போற்றி!
12. ஓம் ஆதிரை நாளுகந்தாய் போற்றி!
13. ஓம் ஆயிரந் தோளுடையாய் போற்றி!
14. ஓம் ஆறு சடைக்கரந்தாய் போற்றி!
15. ஓம் ஆனஞ்சு உகந்தாய் போற்றி!
16. ஓம் ஆனந்தக் கூத்தா போற்றி!
17. ஓம் இரத்தின சபாபதியே போற்றி!
18. ஓம் இளநிலாச் சென்னியாய் போற்றி!
19. ஓம் உமைகாண ஆடுவாய் போற்றி!
20. ஓம் உமைபாகம் கொண்டாய் போற்றி!
21. ஓம் உலகுக்கு ஒருவனே போற்றி!
22. ஓம் ஊழிக் கூத்தனே போற்றி!
23. ஓம் எடுத்தபொற் பாதத்தாய் போற்றி!
24. ஓம் எண்திசை மூர்த்தி போற்றி!

25. ஓம் எரிபுரை மேனியாய் போற்றி!
26. ஓம் எரியாடல் அமர்ந்தாய் போற்றி!
27. ஓம் ஐந்தொழில் நடத்தாய் போற்றி!
28. ஓம் ஒளிவளர் விளக்கே போற்றி!
29. ஓம் கங்கையின் தலைவா போற்றி!
30. ஓம் கட்டங்கம் ஏந்தியோய் போற்றி!
31. ஓம் கண்ணின் மணியே போற்றி!
32. ஓம் கண்மூன்று உடையாய் போற்றி!
33. ஓம் கபாலக் கையனே போற்றி!
34. ஓம் களிற்றுரி போர்த்தாய் போற்றி!
35. ஓம் கற்பகக் கொழுந்தே போற்றி!
36. ஓம் கனகக் குன்றே போற்றி!
37. ஓம் குனித்த புருவத்தாய் போற்றி!
38. ஓம் கூத்துகந்த தேனே போற்றி!
39. ஓம் கூற்றுதைத் தானே போற்றி!
40. ஓம் கொக்கிறகுச் சென்னியாய் போற்றி!
41. ஓம் கொடுகொட்டி ஆடுவாய் போற்றி!
42. ஓம் கொன்றை மாலையாய் போற்றி!
43 ஓம் சித்திரசபாபதியே போற்றி!
44. ஓம் சிதம்பரப் பொருளே போற்றி!
45. ஓம் சிலம்பொலி அடியாய் போற்றி!
46. ஓம் சிவகாமி மணாளா போற்றி!
47. ஓம் சிவானந்தக் கூத்தா போற்றி!
48. ஓம் சிற்றம்பல மேயாய் போற்றி!
49. ஓம் சுந்தரக் கூத்தா போற்றி!
50. ஓம் செந்தமிழ் மலர்சூடி போற்றி!
51. ஓம் சோதியுட் சோதி போற்றி!
52. ஓம் ஞானசபாபதியே போற்றி!
53. ஓம் ஞான மாநடத்தாய் போற்றி!
54. ஓம் தாமிர சபாபதியே போற்றி!
55. ஓம் திசைக்கெல்லாம் வித்தே போற்றி!
56. ஓம் தில்லை அம்பலவா போற்றி!
57. ஓம் தீவினைகள் தீர்ப்பாய் போற்றி!
58. ஓம் துன்பம் துடைப்பாய் போற்றி!
59. ஓம் தூவண்ண நீற்றாய் போற்றி!
60. ஓம் தெய்வக் கூத்துகந்தாய் போற்றி!
61. ஓம் தெய்வச் சுடரே போற்றி!
62. ஓம் தெய்வ நடத்தரசே போற்றி!
63. ஓம் தென்பால் உகந்தாடுவாய் போற்றி!
64. ஓம் நடமாடும் நாயகா போற்றி!
65. ஓம் நடராச பதியே போற்றி!
66. ஓம் நள்ளிருள் நட்டமாடி போற்றி!
67. ஓம் நன்ஞானக் கூத்தா போற்றி!
68. ஓம் நாகம் அசைத்தாய் போற்றி!
69. ஓம் நாற்றிசை விளக்கே போற்றி!
70. ஓம் நீலமணி மிடற்றாய் போற்றி!
71. ஓம் நீறு மெய்பூசுவாய் போற்றி!
72. ஓம் நெற்றிக்கண் நெருப்பே போற்றி!
73. ஓம் படர்சடைப் பால்வண்ணனே போற்றி!
74. ஓம் பண்ணார் இந்தமிழே போற்றி!
75. ஓம் பண்ணின் இசையே போற்றி!
76. ஓம் பதஞ்சலிக்கு அருளியோய் போற்றி!
77. ஓம் பரம நாடகா போற்றி!
78. ஓம் பரமாய பரஞ்சுடரே போற்றி!
79. ஓம் பலிதேரும் இறைவா போற்றி!
80. ஓம் பல்லூழி படைத்தாய் போற்றி!
81. ஓம் பவள மேனியாய் போற்றி!
82. ஓம் பளிங்கு மணிக்குன்றே போற்றி!
83. ஓம் பனித்த சடையாய் போற்றி!
84. ஓம் பாடிளம் பூதத்தாய் போற்றி!
85. ஓம் பாரிடம் சூழ ஆடுவாய் போற்றி!
86. ஓம் பிறவாய் இறவாய் போற்றி!
87. ஓம் புரமெரிய நக்காய் போற்றி!
88. ஓம் புலிக்காய் முனிவர்க்கருளினோய் போற்றி!
89. ஓம் புலியுரி அதளினாய் போற்றி!
90. ஓம் புவன போகமே போற்றி!
91. ஓம் பூதம்பாட ஆடுவாய் போற்றி!
92. ஓம் பொதுவில் ஆடுவாய் போற்றி!
93. ஓம் பொன்னம்பலவாணா போற்றி!
94. ஓம் மண்துலங்க ஆடுவாய் போற்றி!
95. ஓம் மணிமன்ற வாணா போற்றி!
96. ஓம் மதயானை உரித்தோய் போற்றி!
97. ஓம் மதியணி சடையாய் போற்றி!
98. ஓம் மழுவேந்தி ஆடுவாய் போற்றி!
99. ஓம் மன்றில் ஆடும் மணியே போற்றி!
100. ஓம் மாணிக்க வண்ணனே போற்றி!
101. ஓம் மாநடஞ்செய் மறையோய் போற்றி!
102. ஓம் மால்கடல் ஆனாய் போற்றி!
103. ஓம் மான்மறிக் கையாய் போற்றி!
104. ஓம் மூவிலை வேலேந்தி போற்றி!
105. ஓம் யோக வெள்ளமே போற்றி!
106. ஓம் வானவர் பெருமான் போற்றி!
107. ஓம் வீடருள வல்லாய் போற்றி!
108. ஓம் வெள்ளி அம்பலவாணா போற்றி! போற்றி!

# திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வர் திருக்கோயில் நூதன இராஜகோபுரக் குடமுழுக்கு விழா





கடந்த 1963ஆம் ஆண்டில், தொழிலதிபர் அருட்செல்வர் பொள்ளாச்சி டாக்டர். நா.மகாலிங்கம் அவர்கள் தலைமையில், திருப்பணிக் குழு ஒன்று அமைக்கப்பெற்று, இத்திருக்கோயிலின் கிழக்கு வாசல் பகுதியில் ஏழுநிலை இராஜகோபுரம் கட்டுமானப் பணிக்கான திருப்பணி துவங்கப்பெற்றது. ஏழுநிலைகளும் கான்கிரீட்டால் அமைக்கப் பெற்று, எதிர்பாராத சம்பவங்களால் இத்திருப்பணி பாதியிலேயே நின்றுவிட்டது. சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு துவங்கப் பெற்ற இராஜகோபுரத்திருப்பணி, முற்றுப் பெறாமலேயே கிழக்கு வாயிலுக்கு வெளியே மொட்டைக் கோபுரமாய் நீண்டகாலமாகக் காட்சியளித்து வந்தது. இந்த இராஜகோபுரத் திருப்பணியை நிறைவு செய்ய வேண்டுமென்பது இப்பகுதிவாழ் பக்தகோடிகளின் நீண்டநாள் கோரிக்கையாகவும், பெருவிருப்பமாகவும் இருந்து வந்தது.

இந்நிலையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் உயர்திரு. கே ஆர். பெரிய கருப்பன், அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையர் திரு. த.பிச்சாண்டி, இ.ஆ.ப., அருட்செல்வர் பொள்ளாச்சி டாக்டர் நா. மகாலிங்கம், இத்திருக்கோயிலின் முன்னாள் அறங்காவலர்க் குழுத் தலைவர் திரு. எஸ். இராஜப்பன் ஆகியோர் எடுத்த பெருமுயற் சியின் காரணமாக மேற்கண்ட கான்கிரீட் இராஜகோபுரத் திருப்பணியை மீண்டும் துவங்கி கட்டி முடிப்பதெனத் தீர்மானித்து, திருவான்மியூர் வெள்ளிக்கிழமை விழா குழுவினர் இராஜகோபுரத் திருப்பணியை ரூ. 1. கோடி மதிப்பீட்டில் நன்கொடையாளர் பணியாகச் செய்ய முன்வந்ததை அரசு ஏற்று அனுமதித்த பின்னர், கடந்த 14.07.2007 அன்று திருப்பணி துவக்க விழா நடைபெற்றது.

இத்திருக்கோயிலின் தலபுராணம் மற்றும் சிவ தத்துவம் தொடர்பான சிற்ப வேலைப்பாடுகள் இந்த இராஜ கோபுரத்தில் அமைக்கப் பெற்றுள்ளன. மேலும், புதிய இராஜகோபுரத்தை ஒட்டி, புதிய மதிற்சுவர் திருப்பணி, நூதன இராஜகோபுரத்திலிருந்து பழைய கிழக்குக் கோபுரத்தை இணைக்கும் வகையில் புதிய மண்டபக் கட்டுமானப் பணி, அன்னதானக் கூடம், அலுவலகக் கட்டடம், திருக்கோயிலுக்குள் தியாகராஜ சுவாமி மண்டபத்தின் முகப்பிலுள்ள பிராகாரத் தரையமைப்புப் பணி, நந்தவனம் மற்றும் பிரகாரத் தரையை சுற்றிலும் இயற்கை






நிலத் தோற்றம் அமைத்தல் முதலான பணிகளும் உபயத்திருப்பணியாகவே நிறைவேற்றப் பட்டுள்ளன. மேற்குறித்த திருப்பணிகளெல்லாம் இறையுணர்வும் கொடையுள்ளமும் கொண்ட பேரன்பர்களின் பொருளுதவியோடு வெள்ளிக் கிழமை விழாக்குழுவினர் மூலம் நிறைவேற, 23-05-2008 அன்று குடமுழுக்கு விழா நடைபெற்றது.

இக்குடமுழுக்கு விழாவில், (மாண்புமிகு மத்திய கப்பல், சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பாலு அவர்கள்,) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே ஆர். பெரியகருப்பன் அவர்கள். வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், தொழிலதிபர் பொள்ளாச்சி டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். ராஜா அவர்கள், தமிழ்நாடு அரசு தமிழ்வளர்ச்சி மற்றும் அறநிலையங்கள் செய்தித்துறை அரசு செயலாளர். திரு. கோ. சந்தானம் இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சிறப்பு ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப. அவர்கள், சென்னை மண்டல இணை ஆணையர் திரு. ப. தனபால் அவர்கள் சென்னை மாவட்ட உதவி ஆணையர் திரு. அ. இளம்பரிதி அவர்கள் மற்றும் அறநிலையத் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





# "பசுக்களின் தாய்வீடு" ஆமாத்தூர் அபிராமேச்சரம்



அருள்மிகு ஸ்ரீமுத்தாம்பிகை உடனாகிய ஸ்ரீ அபிராமேஸ்வரர்-திருவாமாத்தூர்.

தெய்வங்களே வழிபட்ட திருத்தலம்!

விநாயகர், முருகன், இராமன், பிரம்மா என தெய்வங்களே வழிபாடு செய்த தலம்- பசுக்கள் தங்கள் தற்காப்புக்காகக் கொம்புகளைப் பெற்ற இடம் - சுயம்பு மூர்த்தியாக ஈசன் விளங்கும் ஊர் - எண்ணற்ற கல்வெட்டுகள் நிறைந்த திருக்கோயில் திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என மூவரால் பாடப்பெற்ற தலம். சுந்தரருக்குப் பொன் வழங்கிய தலம் பிரம்மாண்டமான சுதைச்சிற்ப நந்திவிளங்கும் தலம். பிருங்கி முனிவர் வாழ்ந்து வணங்கிய ஊர் - அருணகிரிநாதர், இரட்டைப் புலவர், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் என பலராலும் பாடப்பெற்ற தலம். நீதி வழங்கும் திருவட்டப் பாறையைக் கொண்ட சிறப்புத்தலம் என பல்வேறு சிறப்புக்களை ஒருங்கே கொண்டு, மங்காப்புகழுடன் விளங்கிவருகிறது, திருவாமாத்தூர் அருள்மிகு முத்தாம்பிகை உடனுறை அபிராமேஸ்வரர் திருக்கோயில், இனி இதன் சிறப்புக்களை விளக்கமாக அறிவோமா?

## நீதியை நிலைநாட்டும் வட்டப்பாறை

பல நூற்றாண்டுகளுக்கு முன் திருவாமாத்தூர்ப் பகுதியில் ஒரு வசதியான குடும்பம் வாழ்ந்து வந்தது. அண்ணன் தம்பி என இருவர் மட்டுமே குடும்ப வாரிசுகள். தம்பி வெளியூர் சென்ற சமயத்தில், தந்தை நோய்வாய்ப்பட்டு இறந்துவிட, அண்ணனோ அனைத்துச் சொத்துக்களையும் விற்றுக் காசாக்கி மறைத்து வைத்து விடுகிறான்.

தந்தையின் மறைவுக்குப் பின்னர் ஊர் திரும்பிய தம்பி, தன் அண்ணனிடம் தனக்குரிய பங்கைக் கேட்கிறான். அண்ணனோ முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்கிறான். தந்தையின் சொத்து ஏதும் இல்லை எனப் பசப்புகிறான்.

தம்பி ஊர்ப்பெரியவர்களிடம் முறையிடுகிறான். ஊரார் தம்பிக்குப் பரிந்து பேசியும் பயன் இல்லை. அண்ணனின் மனம் இளகுவதாக இல்லை. வேறு வழியில்லாமல், முடிவாக, திருவாமாத்தூரில் உள்ள திருவட்டப் பாறைக்குச் சென்று, அதன் மீது கைவைத்துச் சத்தியம் செய்யட்டும் என முடிவு செய்கிறார்கள். அண்ணனும் அதற்கு ஒப்புக்கொள்கிறான்.

அந்தப்பகுதியில் மிகவும் சிக்கலான வழக்குகள் ஒரு முடிவுக்கு வரவில்லை என்றால், திருவாமத்தூர் வட்டப்பாறையில் சத்தியம் செய்து விட்டால்போதும், அது பொய் சத்தியமாக இருக்குமானால், சத்தியம் செய்தவன் உடனே செத்துவிடுவான் என்பதை அப்பகுதி மக்கள் கண்டுவருகின்றனர்.

ஊர்ப்பெரியவர்களுடன் அண்ணன் தம்பி இருவரும் வட்டப்பாறைக்கு வந்து சேர்கின்றனர்.

வட்டப்பாறையை அடைந்ததும் தன் கையிலிருந்து தடி ஒன்றை, தன் தம்பியின் கையில் கொடுத்துவிட்டு, எங்கள் குடும்பத்தில் முன்னோர்கள் சேர்த்து வைத்த சொத்து எதுவுமே என்னிடத்தில் இல்லை இது சத்தியம்'' என்று வட்டப்பாறையின் மீது கைவைத்து சத்தியம் செய்கிறான்.

ஆனால், ஊரார் எதிர்பார்த்தபடி அண்ணனுக்கு ஒன்றுமே நடக்கவில்லை. திருவட்டப்பாறையில் நீதி பொய்த்ததே என வேதனையோடு அனைவரும் கலைந்தனர். தம்பி கையில் கொடுத்த தடியைத் திரும்பப் பெற்றுக் கொண்ட அண்ணன், ஏக மகிழ்ச்சியில் அருகேயுள்ள தும்பூர் கிராமம் நோக்கி நடக்கலானான்.

''பொய்ச்சத்தியம் செய்த என்னை, தெய்வம் என்ன செய்துவிடும், திருவட்டப்பாறைத் தெய்வம் வந்து சீறிக் கொத்துமோ...'' என ஏளனமாகச் சொல்லி வாய்மூடுவதற்குள், பூமியிலிருந்து பீறிட்டு எழுந்த கருநாகம் ஒன்று அவனைச் சீறிக் கொத்தியது. அவனும் இறந்து போனான். அவன் கையில் இருந்த தடி உடைந்தது, அதில் மறைத்து வைக்கப் பட்டிருந்த பொற்காசுகளும், விலை உயர்ந்த நவரத்தினக் கற்களும் அங்கே கொட்டிச் சிதறிக் கிடந்தன.

முன்னோர் சொத்தை எல்லாம் விற்று அவற்றைப் பொற்காசாகவும், நவரத்தினங் களாகவும் தடியில் மறைத்துவைத்து, தம்பியிடம் தடியைத் தந்து பொய்சத்தியம் செய்த அண்ணனை அழித்து, தர்மத்தையும் நீதியையும் காத்தது திருவாமாத்தூர் தெய்வம்.

அண்ணன் உயிர் துறந்த இடம் தும்பூர், இங்குதான் சுயம்பு வடிவான நாகம்மன் கோயில் உள்ளது (காண்க பெட்டிச் செய்தி) வட்டப்பாறை உள்ள இடம் அம்மன் சந்நிதிக்கு அருகே உள்ளது. அதன் மீது இப்போது சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வட்டப் பாறையால் திருவாமாத்தூர் புகழ் பெற்றது.

பசுக்கள் கொம்புகளைப் பெற்ற தலம்

காமதேனு, நந்தி, பசுக்கள் எல்லாம் பிற விலங்குகளின் தாக்குதலை எதிர்க்கவும், தற்காப்புக்காவும் பாதுகாப்பு வழங்கும்படி இங்கே பல ஆண்டுகளாக இறைவனை வேண்டி நின்றன.

இதன் பிறகு இறைவன் கருணையால் அவைகளுக்குக் கொம்புகள் வழங்கப் பட்டதாகத் தலபுராணம் கூறுகிறது. இதனாலேதான் இவ்வூர் தாயூர் என்றும் ஆமாத்தூர் என்றும், பெயர் வழங்கியிருக்கிறது. இவ்வூரைக் கோமாத்துருபுரம் எனவும் புராணம் விவரித்துக் கூறுகிறது. இந்த ஐதீகத்தைக் குறிக்கும் வகையில் குளம்புச்சுவடு இறைவன் திருமேனியில் காணப்படுகிறது.

இரட்டைப்புலவர்கள்.

இங்குள்ள கோயில், பெண்ணை ஆற்றிலிருந்து பிரிந்து ஓடும் பம்பை நதியை ஒட்டி அமைந்துள்ளது. இக்கோயில் ஆற்றின் மேல் கரையில் உள்ளது. ஆனால், திருவா மாத்தூர் கலம்பகம் பாடிய இரட்டைபுலவர்கள் காலத்தில், பம்பை நதியின் கிழக்கரையிலிருந்து இதைச் சரியாகக் கவனிக்காத இரட்டைப் புலவர்கள், (இரட்டைபுலவர்களில் ஒருவர் கால் ஊனம் மற்றொருவர் பார்வையில்லாதவர். நொண்டியைத் தோளில் சுமந்து குருடர் செல்வது,

அவருக்கு நொண்டி வழிகாட்டுவதும் பல்வேறு ஊர்களுக்கு இவர்கள் பயணம் செய்வார்கள் கவிபாடுவதிலும் வல்லவர்கள்) தவறுதலாகப் பாடல் இயற்றி விடுகின்றனர்.

ஆற்குழையோ, அரவோ, ஆயர்பாடி
அருமனையோ
பாற்கடலோ, திங்களோ தங்கும் ஆகம்
பலபலவாம்
மாற்கமும் ஆகிநின்றார் மாதைநாதர்
வலங்கொள் பம்பை
மேற்கரையில் கோயில் கொண்டார்புரம்
சீறிய வெங்கணைக்கே

என்பது அப்பாடல்

இந்தத் தவறான பாடல் அரங்கேறும் வேளையில் சபையோர் இக்குறையைச் சுட்டிக்காட்ட, இரட்டைப்புலவர்கள் மனம் வருந்துகிறார்கள்.

அன்றிரவு முழுவதும் அவர்களுக்குத் தூக்கமே இல்லை. அன்று இரவு கடும் மழை, வெள்ளம் விடிந்து பார்த்தால் கோயிலின் இடப்பக்கம் ஓடிய பம்பை நதி, தனது வழியை மாற்றிக் கொண்டு கோயிலின் வலப்புறமாக ஓடியது.

''வலங்கொள் பம்பையின் மேற்கரையில் கோயில் கொண்டார்'' என்று பாடிய இரட்டைப் புலவர்களின் வாக்கு பொய்க்காது காத்தருளினான் இறைவன்.

## தெய்வங்கள் வழிபட்ட தலம்

இக்கோயிலில் விநாயகர், முருகர், இராமர், கலைமகள், மலைமகள், பிரம்மா எனப் பல்வேறு தெய்வங்களும் இங்குள்ள இறைவனை வழிபாடு செய்து அருள் பெற்றதாகப் புராண வரலாறு கூறுகிறது.

இங்குள்ள கோயில் புதுமையானது சோழ மன்னர்கள் உருவாக்கிய கோயில்கள் பலவும் இறைவன் கிழக்குநோக்கியும், அவருக்கு இடப்புறம் அம்பிகை தெற்கு நோக்கியவாறும், அல்லது இடப்புறத்தில் கிழக்கு நோக்கியபடியுமே அமைந்திருக்கும் ஆனால் நாயக்க மன்னர்கள் காலத்தில் இடப்புறம் இருந்த அம்பிகை வலப்புறம் வந்தது மட்டுமின்றி இறைவனுக்கும், இறைவிக்கும் தனித்தனியாக ஒன்றையொன்று எதிர் நோக்கியவாறு கோயில்கள் அமைத்துள்ளனர். இறைவன் கிழக்கு நோக்கி நிற்க அம்பிகை மேற்கு நோக்குகிறாள்.

குடமுழுக்கு விழாவின் போது புதிதாக இராஜகோபுரம் எழுப்பப்பட்டு உள்ளது.

இறைவன் பெயர் அபிராமேசுவரர். இவரே அழகிய நாதர் என்றும் அழைக்கப்படுகிறார். இறைவி பெயர் முத்தாம்பிகை அம்மன். தலவிருட்சம் வன்னிமரம்.



## கல்வெட்டுகள் நிறைந்த திருக்கோயில்

இத்திருக்கோயிலில் பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றின் மூலம் இத்திருக்கோயில் திருப்பணிகள், வரலாற்றுச் செய்திகள் முதலானவற்றை அறிய முடிகிறது. தொல்லியல் துறை ஆய்வறிக்கையயின்படி கி.பி. 1903, கி.பி. 1915, கி.பி. 1922 ஆகிய ஆண்டுகளில் மொத்தம் 72 கல்வெட்டுகள் கண்டறியப் பட்டுள்ளன.

இவ்வூர் தேவதானமாக வழங்கப்பட்டது, என்ற செய்தியும், முதலாம்பராந்தக சோழர்காலத்தில் அருகூர் தச்சன் நாரணன், வேகண்டன் ஆகிய திருவாமாத்தூர் ஆசாரியர் இருவர் இத்திருக்கோயிலைக் கட்டிய செய்தி கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

முதலாம் பராந்தகன் (கி.ப.910) முதல் ராஜராஜன் (கி.பி.999) முதலாம் ராஜேந்திர சோழன் (கி.பி.1015) முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1102) இரண்டாம் ராஜேந்திரன் (கி.பி. 1135), மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1191), இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன்(கி.பி.1247), இரண்டாம் மாறவர்ம விக்கிரம பாண்டியன் (கி.பி.12890,) விஜயநகர மன்னர், சம்புவராயர் என பல்வேறு மன்னர்களும் இவ்வாலயத்திற்குத் திருப்பணி செய்துள்ளனர். அதேபோல் இம்மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் அடியார்கள் பலரால் திருப் பணிகள் பெருமளவில் மேற்கொள்ளப் பட்டன.

நாட்டில் உள்ள வளவ நாடு திருவாமாத்தூர்

என இவ்வூர் குறிப்பிடப்பட்டு உள்ளது. இவ்வூரை தாயூர், ஆமாத்தூர், கோமாத்ருபுரம் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

திருப்பதியம் பாடியவர்கள்

இத்தலத்தின் மற்றொரு சிறப்பு அம்சம் இவ்வாலய இறைவனைப் பதினாறு அடியார்கள் நாள்தோறும் பதிகம் பாடிவந்தனர். இவர்களுக்கு உணவு, ஆடை, வழங்க, இவர்களுக்கு உதவி செய்ய, ஐந்து பணிப்பெண்கள் அமர்த்தப்பட்டு அவர்களுக்குக் கூலி வழங்கப் பட்டது. இதிலென்ன அதிசயம் என்கிறீர்களா? இந்தப் பதினாறு அடியார்களும் பார்வையற்றவர்கள். இந்தச் செய்தியும் கல்வெட்டில் பதியம் பாடியவர்கள் என்ற தலைப்பில் தரப்பட்டுள்ளது.

மூவரால் பாடல் பெற்றதலம்

தேவாரம் பாடிய மூவராலும் பாடப் பெற்றது இத்தலம் திருஞான சம்பந்தர் தன் பாடலில் இறைவனை ஆமாத்தூர் அம்மான் என்று பாடுகிறார்.

தொண்டர் வந்து வணங்கி மாமலர் தூவி
நின்கழல்
- ஏத்துவார் அவர்
உண்டியால் வருந்த இரங்காதே(து) என்னை
கொலாம்?
வண்டலார் கழனிக்கலந்து மலர்ந்த தாமரை
மாதவர் வான்முகம்
அண்டவாணர் தொழும் ஆமாத்தூர்
அம்மானே''
(சம்பந்தர் தேவராம்)

இந்த ஆமாத்தூர் அம்மான் சுயம்பு மூர்த்தி என்பது சிறப்பு, பசுக்கள் வழிபாடு செய்ததற்கு அடையாளமாக குளம்புச் சுவட்டைத் தன் தலையில் தாங்கி நிற்கிறார். இராமபிரான் இலங்கையிலிருந்து திரும்பும்போது இவரை வழிபாடு செய்திருக்கிறார். அதனால்தான் இராமனும் வழிபாடு செய்யும் ஈசன் இவர். என்கிறார் அப்பர் சுவாமிகள்.

மாமர்த்தாகிய மாலயன் மால்கொடு
தாமாத் தேடியும் காண்கிலர் தாள்முடி
ஆமாத்தூர் அரனே அருளாய் என்றென்று
ஏமாப் பெய்திக்கண்டார் இறையானையே
(அப்பர் தேவாரம்)

சுந்தரருக்கு இறை தொண்டுக்காக பொருட்செல்வம் தேவைப்பட்டது. அதற்காக பல பதிகங்களுக்குச் சென்று, தலங்களைப் பாடினார். அந்த வகையில் திருவாமாத்தூரில் பதிகம் பாடினார். ஆனால், இறைவன் அவருக்குத் தந்ததோ வன்னிமரத்துக் காய்களை அவற்றை பெற்ற சுந்தரருக்கு, அவையாவும் பொன்னாக மாறியது கண்டு மகிழ்வுற்று அவ்வூரிலிருந்து விடைபெற்றார்.

''பொன்னவன் பொன்னவன் பொன்னைத்
தந்தென்னைப் போகவிடா
மின்னவன் மின்னவன் வேதத்தின்
உட்பொருளாகிய
அன்னவன் அன்னவன் ஆமாத்தூர் ஐயனை
ஆர்வத்தால்
என்னவன் என்னவன் என மனத்
தின்புற்றிருப்பனே''
(சுந்தரர் தேவாரம்)

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எனும் முருகதாச சுவாமிகள் இவ்வூரில் மடம் நிறுவி வாழ்ந்து ஞானசமாதி அடைந்தார்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

கி.பி. 1839ல் திருநெல்வேலி மாவட்டத்தில் தோன்றி திருவாமாத்தூரில் ஒளிவடிவில் ஜீவசமாதி ஆனவர். அருணகிரிநாதரின் மறுபிறவியாகப் போற்றப்படும் இவர் ஜீவ காருணியத்தை வலியுறுத்தியவர், வள்ளலாரின் உற்ற நண்பர்.

திருவாமாத்தூரில் இவரது வழித்தோன்றல்களால் பராமரிக்கப்படும் கௌமார மடம் இன்னும் புகழ் பெற்று விளங்கி வருகிறது. இம்மடத்தில் சுவாமிகள் வழிபட்டவை வேல்முதலிய திருவுருவங்களும் எழுதிய நூல்களும் போன்றவை பேணிப்பாதுகாக்கப் பட்டு வருகின்றன.

ஆறு சமயங்களுக்கும் பாடல் இயற்றிய சுவாமிகள் சித்திரக் கவிக்கு தண்டபாணி சுவாமிகள் எனப் பெயர் பெற்றவர்.

சிவன் ஆலயம்

சரி, இனி நாம் இறைவனின் கோயிலுக்குள் செல்வோம் சுவாமிக்கு கிழக்கு நோக்கிய இராஜகோபுரம் புதிதாக எழுப்பப்பட்டுள்ளது. இக்கோயிலில் இரண்டு பிராகாரங்கள். முதல் பிரகார வடகிழக்கு மூலையில் இக்கோயிலைக்

கட்டிய அச்சுத தேவராயன் சிலை உள்ளது. இரண்டு பிரகாரத்தில் விநாயகர், இராமர், காசி விசுவநாதர் சுப்பிரமணியர் என தனித்தனி சந்நதிகள்.

இதனுள்ளே எழிலுடன் விளங்கும் நூற்றுக்கால் மண்டபம் இன்னும் எழிலுற நிமிர்ந்து நிற்கிறது.

இங்கே அவ்வப்போது திருமணங்கள் நடக்கின்றன. இக்கோயிலில் பெரிய சுதைச் சிற்ப நந்தி எழிலுடன் கம்பீரமாய் வீற்றிருக்கிறது.

இறைவனின் மன்னர்கால பெயரும் தற்காலப் பெயரும் அபிராமேஸ்வரர்தான் அழகிய நாதர். ஆளுடைய அழகிய நாதர் என்ற பெயரும் அக்கால வழக்கில் இருந்தன.

அம்பிகை ஆலயம்

இறைவனைத் தரிசித்த பிறகு, எதிரேயுள்ள அருள்மிகு முத்தாம்பிகை ஆலயத்திற்குள் நுழைகிறோம். விண்ணை நோக்கி நிமிர்ந்து நிற்கும் இராஜகோபுரம் எழிலுடன் காட்சி தருகிறது.

அம்மனுக்கு முத்தை வென்ற முறுவல் நாச்சியார் என்னும் பெயரும் உண்டு.


கருவறை நோக்கிச் சென்றால், முத்தார் நகை அழகுடையாள்'' என அருணகிரிநாதர் பாடியதற்கு இணங்க எழிலான தோற்றத்தில் அம்பிகை காட்சி தருகிறாள். அவள் நின்றிருக்கும் பீடம் மிகவும் உயரமானது இவளின் திருவடிக்கு கீழே (வட்டப்பாறையில் பொய்ச்சத்தியம் செய்தவனைச் சீறி எழுந்து கொன்ற) நாகத்தின் வால்பகுதி, நீட்டிக் கொண்டிருக்கிறது.

இக்கோயிலைச் சுற்றி வரும்போது தெற்குப் பக்கம் வட்டப்பாறை சந்நிதி இருக்கிறது. முன்பே சொன்னபடி இது சிவலிங்கதிருவுருவ சந்நிதி.

கோயிலின் வெளிப்புறத்தில் மிகப்பெரிய வன்னிமரம் பட்டுப்போன நிலையில் உள்ளது. அதன் அருகேதான் பிருங்கி முனிவர் வாழ்ந்த இடம்.

கோயிலின் வாயிற்புறத்தில் விஷ்ணு துர்க்கை சிவ துர்க்கை என இருவரும் எழிலுடன் காட்சி தருகின்றனர்.

பௌர்ணமி அன்று நடுநிசிப்பூஜை,



அமாவாசை அன்று பூஜை, பிரதோஷ விழா என இங்குள்ள ஆலய நிர்வாகத்தினர் முயற்சியால் நல்ல முறையில் நடந்தேறி வருகிறது.

அமைவிடம்

திருவாமாத்தூர் எங்கியிருக்கிறது? எப்படிச் செல்வது? விழுப்புரத்திலிருந்து செஞ்சி செல்லும் சாலையிலிருந்து நகர எல்லையை ஒட்டி மேற்கு நோக்கி ஒரு சாலை செல்கிறது அது திருவாமாத்தூரை அடைகிறது.

சுமார் 6. கி.மீ. தூரம் விழுப்புரம் பேருந்து நிலையத்திலிருந்து குறிப்பிட்ட நேரங்களில் பேருந்து வசதி உள்ளது. இங்கிருந்து 4. கி.மீ. தூரத்தில் உள்ள ஊர் தும்பூர்.

**கட்டுரை:**
**பனையபுரம் அதியமான்.**

# உலகம் உய்ய உதித்த உடையவர்



ஆளவந்தாரைக் காண வேண்டும் என்ற மிகுந்த வேட்கையுடன் காஞ்சிபுரத்தில் இருந்து ஸ்ரீரங்கம் புறப்பட்டு வந்த ஸ்ரீ இராமானுஜரும், பெரிய நம்பியும் காவேரியின் வடகரையை அடைந்தனர். ஆளவந்தார் என்ற மகான் பரமபதம் அடைந்தார் என்ற செய்தியைக் கேட்டு, சொல்ல முடியாத துக்கத்தில் ஸ்ரீ இராமானுஜரும், பெரிய நம்பியும் ஆழ்ந்தனர். ஒப்பில்லா மகானாகிய ஆளவந்தாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவருடைய உபதேசங்களைக் கேட்க முடியாத பாவியாகி விட்டேன் என மனத்தில் மிகவும் துயரங்கொண்டார். நான் நீசன் அதனால்தான் மகான்களின் தொடர்பு எனக்கு கிடைக்கவில்லை எனப் புலம்பினார்.

பின்னர் வைஷ்ணவர்கள் பெருங்கூட்டமாகக் குடியிருந்த கூட்டத்தில் ஸ்ரீஇராமானுஜரும் பெரிய நம்பியும் சேர்ந்தார்கள். ஆளவந்தாரின் திருவடி முதல் திருமுடி வரை ஸ்ரீஇராமானுஜர் கவனித்தார். அவருடைய திருக்கரங்களை உற்று நோக்கியபோது கைவிரல்களில் மூன்று மடங்கி இருந்தன. இது இராமானுஜரை வியப்பில் ஆழ்த்தியது. கூடியிருந்த அடியார்களிடம், ''ஆசாரியார்கள் வலது கரத்தில் மூன்று விரல்கள் மடங்கி இருக்கிறதே, எப்போதும் இப்படித்தான் இருந்ததோ'' என வினவினார். கூடியிருந்த அடியார்கள் ''இல்லை, இல்லை'' இதற்கு முன் ஒருபோதும் இவ்வாறு இருந்தது இல்லை'' எனப் பதில் கூறினார்கள். பின்னர் ஸ்ரீஇராமானுஜர் ஏதோ குறிப்பினை உணர்ந்தவரைப் போல மீண்டும் கூடியிருந்த அடியார்களிடம் ''குருநாதருக்கு நிறைவேறாத ஆசைகள் எவையேனும் இருந்ததா? என வினவினார். பெரியவர் ஒருவர் சொன்னார். ''ஆச்சாரியர் வியாசரையும் விஷ்ணுபுராணம் இயற்றிய பராசர முனிவரையும் மிகவும் நேசித்தார். ஏதேனும் ஒருவகையில் நன்றி பாராட்ட வேண்டும் என கருதியது உண்டு'' என்றார்.

**பெ. இராமநாதபிள்ளை,**
**செயல் அலுவலர்,**
**திருமூர்த்திமலை**

மற்றொருவர் அதே உணர்வு நம்மாழ்வாரிடமும் ஆச்சாரியாருக்கு இருந்தது என்றார். இன்னொருவர் ''எனக்குத் தெரிந்தவரை வியாசரின் பிரம்மசூத்திரத்திற்கு ஆழ்வார்கள் நெறியில் உரை காணும் ஆசை இருந்தது.'' என்றார். மூவாசையையும் துறந்த மகானுக்கு இப்படி மூன்று ஆசைகள் நிறைவேறாமல் இருந்தன என்பதனை அறிந்து ஆளவந்தாரின் திருவுடல் முன்பு உணர்ச்சிப் பரவசம் மிக்கவராக வணங்கி உரைக்கலானார்.

1. ''அடியேன் இராமானுஜன், வைஷ்ணவ நெறியில் நிலைத்து நிற்பேன், உண்மை தெரியாமல் மயங்கி இருக்கும் மக்களை பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்றவர்களாக்கி, தமிழ் வேதத்தில் கரை கண்டவர்களாகவும், சரணாகதி தர்மத்தில் ஈடுபட்டவர்களாகவும் இருக்கச் செய்து எப்போதும் ரட்சிக்கக் கடவேன்'' என்றார். ஆச்சாரியாரின் மடங்கிய விரல்களில் ஒன்று தாமாகவே நிமிர்ந்தது.

2. ''அடியேன் ராமானுஜன் எல்லா சாஸ்திரங்களையும் அதன் அர்த்தங்களையும் திரட்டி, ஸ்ரீ பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீ பாஷ்யம் இயற்றி உலகுக்கு அருளுவேன்''என்றார். ஆச்சாரியாரின் மடங்கிய விரல்களில் இரண்டாவது விரல் தானாகவே நிமிர்ந்தது.

3. ''அடியேன் இராமானுஜன், ஒப்பற்ற ஞானியாக விளங்கி வேத வேதாந்த வித்தகர் ஸ்ரீ விஷ்ணு புராணத்தை செய்தருளிய ஸ்ரீ பராசர மஹரிசியார் பெயரினை ஒரு ஸ்ரீ வைஷ்ணவனுக்குப் பெயராக வைத்து, அந்த மஹரிஷியிடம் நன்றிக்கடன் தீர்ப்பேன்'' என்றார் ஆளவந்தாரின் மடங்கிய மூன்றாவது விரலும் நிமிர்ந்தது.

விரல்கள் மட்டுமா நிமிர்ந்தன? சமுதாயத்தின் நெடுங்கால நம்பிக்கையும் சேர்ந்து நிமிர்ந்தது.

''ஸ்ரீயதிராஜ வைபவம்'' என்ற நூலில் வடுக நம்பி

1. வியாசருடைய பிரம்ம சூத்திரத்திற்கு பாஷ்யம் எழுதி விரிப்போம் என்றும்.

2. பராசர மஹரிஷியின் நாமத்தினை ஒரு வைஷ்ணவனுக்கு வைத்து நன்றிக்கடன் தீர்ப்பேன் என்றும்

3. அது போல் ஆச்சாரியாரும், ஆழ்வாராகவும், இருந்து பூவுலகில் வைஷ்ணவ நெறியின் முதல் ஆச்சாரியாருமாய் விளங்கி நம்மாழ்வாரின் திருநாமத்தினை ஒரு உத்தம வைஷ்ணவனுக்கு வைத்து நன்றிக்கடன் தீர்ப்பேன்'' என்றும் கூறிய போது மடங்கிய மூன்று விரல்களும் நிமிர்ந்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த அதிசயத்தைக் கண்ட எல்லோரும் வியந்தனர். இவரே இனி நமக்குத் தக்க தலைவரானவர் என திருவரங்கத்து சான்றோர்கள் கருதினர், ஸ்ரீ இராமானுஜரை மஹா புருஷராய், புருஷோத்தமனின் அவதாரமாகவே கருதி மதித்து போற்றினர்.

ஆளவந்தாருக்கு சாஸ்திர சம்பிரதாயங்கள் பிறழாமல் சடங்குகள் நடந்தன. ஆளவந்தார் பரமபதம் எழுந்தருளிய பொழுது அவருக்கு வயது 125 ஆளவந்தார் ''ஸ்தோத்ர ரத்னம், ஸித்தி த்ரயம், ஸ்ரீ கீதார்த்த சங்கரஹம், ஆகம ப்ராமண்யம், சதுஸ்லோகி'' போன்ற ஒப்பற்ற நூல்களை இயற்றியுள்ளார்.

ஆளவந்தாரை உயிருடன் பார்க்கும் பாக்கியத்தை அளிக்காத ஸ்ரீ ரங்கநாதரைப் பார்க்காமலேயே ஸ்ரீ இராமானுஜர் ஸ்ரீகாஞ்சிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

''சீரான் அரங்கநாதர் கிடந்த திருமால் செய்த
உபகாரம் போராதோ
இன்று எனக்கென்னப்பூவை வண்ணன் உடன்
வெறுத்தங்கு
ஆரா அன்பர் ஆளவந்தார்க்கு அடுத்த
கன்மம் அமைத்ததற்பின்
நேரார் இளையாழ்வார் உடனே மீண்டும்
காஞ்சிக்கு ஏகினார்''

- ஸ்ரீ இராமானுஜ வைபவம் 346

காவேரியைக் கடந்து, பலதேசங்களையும் கடந்து, நகரம் கிராமம் தாண்டி, ஸ்ரீ காஞ்சிபுரத்தை அடைந்தார், பாலாற்றில் நீராடி, ஆளவந்தாரின் பிரிவுத் துயரையும், வழி நடந்த களைப்பையும் நீக்கிக் கொண்டார். பேரருளாளனையும் பெருந்தேவியாரையும் வணங்கி ''ஸ்தோத்ர ரத்னம்'' என்ற பாமாலையைப் பாடித் தன் இல்லம் சேர்ந்தார்.

மறுநாள் அதிகாலை எழுந்து காலைக் கடன்களை முடித்து, திருக்கச்சி நம்பியார் மடத்திற்குச் சென்று அவரை வணங்கி ஆளவந்தாரைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் அவரிடம் கூறினார். திருக்கச்சி

நம்பியும் துன்பத்தால் வருந்தி ஆளவந்தாருக்குச் சீடன் செய்ய வேண்டிய ''ஸ்ரீ சூர்ண பரிபாலனம்'' முதலிய சாஸ்திர சம்பிரதாயங்களைச் செய்து முடித்து, காஞ்சி வரதராஜ பெருமாளுக்கு ஆலவட்டம் கைங்கர்யம் (விசிறி வீசுதல்) செய்து கொண்டு, அவரோடு பேசிக்கொண்டும் இருந்தார். ஸ்ரீ இராமானுஜரும் வழக்கம் போல் மீண்டும், வரதராஜ பெருமாளுக்குத் தீர்த்தகைங்கர்யம் செய்து வந்தார்.

இந்நிலையில் ஸ்ரீ ராமானுஜருடைய தாயார் திருமதி காந்திமதி அம்மாள் பரமபதம் அடைந்தார் இராமானுஜர் தன் தாயாருக்குச் செய்ய வேண்டிய இறுதி சடங்குகளைச் சாஸ்திர சம்பிரதாயப்படி செய்து, தன் மனைவியுடன் ஸ்ரீ காஞ்சிபுரத்திற்கே வந்து வாழ்ந்து வரலானார்.

ஆன்மாவில் குடி கொண்ட ஆளவந்தாரைக் குருநாதனாக ஏற்கும் வாய்ப்பை இழந்த போதிலும், அவரது சீடரான திருக்கச்சி நம்பியின் உத்தம சீடனாகஇருக்கலாமே என்ற நிலையில் திருக்கச்சி நம்பியிடம் தம் விருப்பத்தை வெளியிடவும், அதற்கு திருக்கச்சி நம்பியார் எவ்வகையிலும் உடன்படவில்லை.

ஆயினும் திருக்கச்சி நம்பிகளை தம்முடைய மானசீக குருவாகவே கருதி வந்தார். சாதி காரணமாகவே தம்மைச் சீடராக ஏற்கவில்லை என நினைத்து.

சாதி புன்மையினை வெறுத்து ஒதுக்க இராமானுஜர் துறவு மேற்கொண்டார். வைசிய குலத்தில் பிறந்த திருக்கச்சி நம்பி. இராமானு ஜரிடம்'' நீர் என்னை ஆச்சாரியானாக ஏற்க விரும்பினாலும் உலகம் இதனை ஏற்றுக் கொள்ளாது.

ஆச்சார்யராக இருந்து செய்ய வேண்டிய தொழில் வேதம் வல்ல வைதிகர்களுக்கே சொல்லப் பட்டுள்ளது. அது என்னால் செய்யக்கூடிய காரியமல்ல'' எனவே இது பற்றி என்னை வற்புறுத்த வேண்டாம் என கேட்டுக் கொண்டார்.

தமக்கு குருவாக இருப்பதற்கு மறுத்த திருக்கச்சி நம்பிகள் உண்ட மிச்சத்தை அந்தணராகிய தாம் உண்ண வேண்டும் என்று தீர்மானித்தார். ''போஜனம் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றோ'' என்னும் தொண்டரடிப் பொடி ஆழ்வார் வாக்கினைப் பின்பற்ற முடிவு செய்தார்.

மனிதனுக்குத் தீய எண்ணங்களினால் தான் தீராப் பிணிகள் ஏற்படுகின்றன என்று மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஊனமில்லா வாழ்க்கைக்கு உயர்ந்த நினைவுகளும், எண்ணங்களும் வேண்டும் என்கிறார் அப்பர் அடிகள், உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே எதில் உயர்ந்தவர்கள் என்றால் எண்ணத்தால் உயர்ந்தவர்கள் நல்ல நினைவுகளால் உயர்ந்தவர்கள்.

விதையை நட்டு தண்ணீர் விடுவது நமது கடமை, அதை விளைவிப்பது ஆண்டவன் செயல். நல்ல விதைகளால் நல்ல பலனை அடையலாம். நல்ல எண்ணங்களை ஊன்றினால் நல்ல வாழ்வு வாழலாம். இறைவனை சிந்திப்பதும் பெரியோர்கள் கூறிய நல்லொழுக்கம் தரும் உபதேசங்களைச் சிந்திப்பதும் கடைப்பிடிப்பதுமே உயர்ந்த வாழ்வுக்கு அடிப்படை.

- ஆட்சிலிங்கம்.

# பிரார்த்தனை

ஆனந்தமான வாழ்வை அடைய விரும்புவோர்க்குப் பிரார்த்தனை அவசியம்

பிரார்த்தனை, ஒளி மிகுந்த ஆற்றலின் பிறப்பிடம், ஓர் அற்புத உலகின் திறவுகோல்.

பிரார்த்திப்பது இயல்பான செயலே, ஆனால் நம்மில் பெரும்பாலோர் முறையாக இறைவணக்கம் செய்வதில்லை.


வாழ்க்கைப் பயணத்தில் இன்ப வேளையில் ஆண்டவரை நினைப்பதில்லை; துன்பச் சுமை அதிகமாகி, இனித் தாங்க இயலாது எனும் நிலை வரும்போது தான் ஆண்டவரிடம் முறையிடுகிறோம். இந்த வேளையிலே நாத்திகன் கூட விதிவிலக்காய் நிற்க முடிவதில்லை. வழிபாடு மனிதனுக்கு அவசியமானது, உடலுக்கு உணவு எவ்வளவு முக்கியமோ அவ்வாறே மனத்திற்கு இறை வணக்கம் முக்கியமானது.

இது எல்லைகளற்ற ஆசைகளில் திரியும் மனத்தை ஒரு நிலைப்படுத்துகின்றது. தக்கவரிடம் பிரார்த்தனையை முறையாக அறிந்து தொடங்கினால் பல அற்புதங்களைச் சாதிக்கலாம்.

நமது ஞானிகள், மகான்கள் சொல்வதைக் கூடக் கேட்க வேண்டாம். உலகம் பெரிதெனப் போற்றும் விஞ்ஞானம் இறை வணக்கத்தின் ஆற்றலைப் பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்.

'வழிபாடு என்பது ஒருவன் தோற்றுவிக்கக் கூடிய மிக மிகச் சிறந்த வன்மைமிக்க ஒரு பேராற்றல் ஆகும். இவ்வாற்றல் நிலத்தின் ஈர்ப்பு எங்ஙனம் உண்மையானதோ, அங்ஙனம் உண்மையானதாகும். 'ரேடியம் எனும் கதிரியைப் போல, வழிபாடு என்பது தன்னிலிருந்து ஒருவன் தோற்றுவிக்கக் கூடிய ஒளிமிகுந்த ஆற்றலின் ஒரு பிறப்பிடம் ஆகும்.

- டாக்டர் அலெக்சிஸ் காரேல்



மருத்துவ அறிஞர்கள், வழிபாட்டின்போது ஏற்படும் உடல் மாற்றங்களை ஆராய்ச்சி மூலம் அவ்வப்போது நமக்கு வெளிப்படுத்தி வருகின்றனர். பிரார்த்தனையின் போது, உள்ளே இழுக்கும் ஆக்ஸிஜன் தேவை குறைகிறது. அதே போல, வெளியிடும் கார்பன் டை ஆக்ஸைடு அளவும் குறைகிறது.

புறத்தோலின் தடை அதிகரிக்கிறது. மூளையின் எண்ண அலைகள் சீராக்கப் படுகின்றன. இவ்வாறாக வழிபாட்டின் அவசியத்தை வலியுறுத்தி மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். மனமும் உடலும் நல்ல ஆரோக்கிய நிலையடைய எளிய உபாயம் பிரார்த்தனையே.

இதையே நமது அப்பரடிகள் இரண்டே அடிகளில் பாடுகிறார்.

துன்பம் இன்றித் துயர்இன்றி என்றும் நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்!

பிரார்த்தனை குறைவிலாச் செல்வம்; தோண்டக் குறையாத சுரங்கம்! எனவே, முறையாகப் பிரார்த்திக்க ஒவ்வொரு வரும் கற்றுக் கொள்ள வேண்டும்.

பிரார்த்தனைக்கு சில அடிப்படையான நியதிகள் உண்டு. முதலாவது இடம்: அதாவது பூஜைக்குரிய தனியிடம் ஒதுக்குவது முக்கியமானதாகும்.

பிரார்த்தனை அறை, நமது அவசரத் தேவைகளை ஆண்டவனிடம் சமர்ப்பிக்கும் இடமல்ல, நம்மை நாமே அவரிடம் சமர்ப்பிக்கும் இடமாகும்.

இந்த ஒலி உலகத்தைக் கடந்து, ஐக்கியமாகவே நமது ஞானிகள் ஏகாந்தமான இடமாக நதியோரமோ, மலைச்சிகரமோ, குகையோ, காடோ இத்தகைய இடங்களில் வாசம் செய்தனர்.

ஆலயமும் இத்தகைய சூழலில், பிரார்த்தனைத் தலமாக எழுந்தது.

இன்றைய நிலையென்ன?

நம் போன்றோர் வீட்டினுள்ளே பூஜை அறையென ஒரு பகுதியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட இடம் எவ்வாறு முக்கியமானதோ அவ்வாறே குறிப்பிட்ட நேரமும் முக்கியம்.

தினசரி ஒருவன் ஆறுவேளைகளில் பிரார்த்தனை செய்தல் வேண்டும். ஆலயங்களில் ஆறுகால பூஜை என்பது இந்த வழிபாட்டைக் குறிப்பதே.

விடியற்காலையில் 4.30 மணி முதல் 6 மணிவரை, காலை 7 மணி, நண்பகல் 12 மணி, மலை 6 மணி முதல் 7 மணி அதாவது அந்திவேளை, இரவு 9 மணி, நள்ளிரவு 12 மணி வழிபாட்டிற்குரிய ஆறு வேளைகளாகும், வழிபாடு நேரம் குறைந்த பட்சம் 15 நிமிடங்களாவது இருக்க வேண்டும்.

பிரார்த்தனைக்கு மிகவும் உகந்த வேளை விடியற்காலை வணக்கமேயாகும். இவ்வேளையைப் 'பிரம்ம மூகூர்த்த வேளை' என்கின்றனர் ஆன்றோர்.

அதாவது, கிழக்கு வெளுக்கும் முதற்குறியிலிருந்து சூரிய உதயத்திற்கு இடையில் (4.30 மணிமுதல் 6 மணிவரையில்) சுவர்ணலோகத்துக் காற்று இந்த உலகத்தின் மேல் இறங்குகிறது. சுமார் 3 நிமிட நேரம் இறங்கும்.

அந்த நேரத்தில் விழித்துக் கொண்டு, வேதங்களைக் கேட்பதிலும், வாய்விட்டுப் படிப்பதிலும் இருந்தால் நம் அறிவு துலங்கும், ஞான வேட்கை உண்டாகும்.

நாம் முன்னோர் குறிப்பிட்ட மற்ற வேளைகளிலும் அவ்வாறே நமக்குத் தெரியாத ஒரு தனிக் காந்த சக்தி உலகில் நிலவுகிறது.

எனவே, வழிபாட்டில் குறிப்பிட்ட நேரம் என்பது மிகவும் முக்கியமானது.

புறம்பாக, நமக்குத் தேவையான நேரத்திலும், ஓய்வு நேரத்திலும் ஆண்டவரை வழிபடுவது வெட்கரமானது.

'நார்விச்' நகரின் கவர்னராக இருந்த பெர்டிராம் போலோக், தம்முடைய சுறுசுறுப்பான அலுவலக வேலையிலும் கூடப் பிரார்த்தனையைக் குறிப்பிட்ட நேரத்தில் செய்வாராம்.

பிரார்த்தனை நேரத்தில் அவரைப் பார்க்க யார் வந்தாலும், அவரைப் பக்கத்து அறையில் இருக்கச் செய்; காத்திருக்கமாறு சொல், நான் இறைவனோடு பேச வேண்டிய நேரமிது' என்பாராம்.

எனவே, நேரத்தை முக்கியமாகக் கருத வேண்டும். உள்ளும் புறமும் தூய்மையாக இருத்தல் வேண்டும்.

பிரார்த்தனையின் போது வாய்விட்டு ஏதாவது ஒரு மந்திரத்தையோ, பாசுரத்தையோ உரக்கச் சொல்லவேண்டும். உள்ளம் உருகிக் கண்ணீர் மல்க வேண்டும்.

இதய பாரத்தால் வெளியாகாத பிரார்த்தனை பலன் கொடாது.

எல்லாம் வல்ல அருட்பெரும் ஜோதி ஆண்டவரிடம், இத்தகைய நிலையில் வேண்டுவது என்ன?

நம்மில் பெரும்பாலோர், ஆண்டவனிடம் நினைத்ததைக் கேட்கின்றனர். சொற்பமான உதவிகளை வேண்டி அவர் முன் நிற்கின்றனர்.

பிரார்த்தனை செய்யும்போது, மிகவும் திட்டவட்டமாகக் கேட்க வேண்டும்; உயரிய வாழ்வைக் கேட்க வேண்டும்; அதுவும் திரும்பத் திரும்ப கேட்க வேண்டும்.

நாமே செய்யக்கடியவற்றை இறைவனிடம் கேட்கக் கூடாது; கேட்டால் செய்யவும் மாட்டார். செய்தால் சோம்பேறிகளுக்குத் தரும் பரிசாக அமையும்.

**தென்னம்பட்டு ஏகாம்பரம்**

# சிறந்த செல்வம்

செல்வங்கள் பல, பொருட் செல்வம், மனைச் செல்வம், மக்கட் செல்வம், கல்விச் செல்வம், கேள்விச் செல்வம், சொற் செல்வம், அறிவுச் செல்வம், கால்நடைச் செல்வம்,(கோதனம்) நிலபுலச் செல்வம் முதலியனவாம்.

இச்செல்வங்கள் யாவும் உடையவர்களாய் மேம்பட்டு நிற்போர் கோடிக்கொருவர் இருப்பர். இவைகளையுடையவர்கள் உலகில் மதிக்கப்படுவார்கள். ஆனால், இச்செல்வங் கட்கெல்லாம் தலையாய செல்வம் ஒன்றுண்டு. அச்செல்வம் உடையவரே இம்மையிலும் மறுமையிலும் இன்பமுறுவர். மரங்களில் கற்பகம் சிறந்தது; பசுக்களில் காமதேனு சிறந்தது. பெண்களில் உமாதேவி சிறந்தவர்; மைந்தர்களில் குமாரக் கடவுள் சிறந்தவர்; நதிகளில் கங்கை சிறந்தது. மணிகளில் உருத்திராக்கம் சிறந்தது. மந்திரங்களில் ஓங்காரம் சிறந்தது. அதுபோல் செல்வங் களில் அருட் செல்வம் சிறந்தது.



அருட்செல்வம் உடையவரே உண்மையான செல்வம் உடையவர். ஏனைய செல்வங்கள் தாழ்ந்தவர்களிடமும் காணப்படுகின்றன. மூடனிடத்தில் பொருளும், பண்பில்லாதவனிடம் கல்வியும், உலோபியிடம் நிலபுலமும் பாவிக்கு நன்மனைவியும் இப்படியெல்லாம் அமைந்திருக்கக் கண்கூடாகக் காண்கிறோம்.

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்
பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

-திருக்குறள்

இது துறவற இயலில் முதற்கண் கூறப்பட்ட அரிய அமுத வாக்கு.

அன்புடைமை இல்லற இயலிலும், அருளுடைமை துறவற இயலிலும் கூறப்பட்டுள்ளன.

அன்பு என்பது தொடர்புடையாரிடம் பயன் கருதாமல் செய்யும் விருப்பமாகும். அருள் என்பது. தொடர்பில்லாத எல்லா உயிர்களிடமும் செய்யும் விருப்பமாகும்.

அன்பிலிருந்துதான் அருள் தோன்றுகின்றது. வெண்ணெய் உருகி நெய்யாக அமைவதுபோல், அன்பு உருகிப் பெருகி அருளாக மலர்கின்றது.

பொருட்செல்வம் உடையவரை அவர் மாட்டுப் பயன் பெறுவோர்கள் மட்டும், அவர் உள்ளபோது புகழ்வர். அருட்செல்வம் உடையவர்களை அகில உலகங்களும் புகழும், அருளாளர் மறைந்த பின்னரும் உலகம் போற்றிக் கொண்டேயிருக்கும்.

ஒரு கோடி பொன்னும், ஆயிரம் காணி நிலமும் பெரிய மாளிகையையும், ஆடைகளும், அணிகலன்களும் உடைய ஒரு பெருஞ் செல்வன், அருட்செல்வத்தைப் பெறாது இறப்பானாயின் மேல் உலகில் அவன் பரம வறியனாக நின்று அவலமுறுவான் அந்த ஒளியுலகிலே அவனைப் புகவிடாது அகற்றுவார்.

மதுரையிலே ஒரு பெருஞ் செல்வன் வீடு, நிலம் புலம், ஏவலர், காவலர் எல்லாம் அமைய

அரச போகத்தில் திளைக்கின்றார். சென்னை போகக் கருதினார். முதல் வகுப்பில் புகை வண்டியில் ஏறினார். பெட்டிப் படுக்கை, துணிகள், குடை, பாதரட்சை முதலிய எல்லாம் வண்டியில் நிரம்ப ஏற்றப்பட்டன. மூவாயிரம் ரூபாயும் முப்பது ரூபாய் சில்லரையும் ஒருதோல் பையில் இட்டு அவருடைய (தலைமை) தனது ஆள்கொண்டு வந்தார். புகைவண்டி நிலையத்தில் பலர் அவரை வழிவிட்டார்கள். வண்டி புறப்பட்டுவிட்டது. ஆனால் அவருடைய தனது ஆள் அந்தப் பணப்பையை அவர்பால் தர மறந்துவிட்டார். இவரும் கேட்டு வாங்க மறந்தார். வண்டி ஓடுகின்றது. காற்றாடிகள் சுற்றுகின்றன. சிறிது நேரம் செய்தித்தாள் படித்தார். மெத்தையில் சாய்ந்து கண்துயின்றார். செங்கல்பட்டு வந்தவுடன் விழித்தார். பல்தேய்த்துக் கை கால் கழுவிப் பசியாறினார். சட்டைப் பையில் பணப்பையில்லை. அங்கும் இங்கும் தேடுகின்றார்.

இட்டிலியும் காபியும் தந்த பணியாளர், ''என்ன ஐயா! பணங்கொடும்'' என்று முடுக்குகின்றான். கையில் ஓர் அணாவும் இல்லை, வண்டி எழும்பூருக்கே வந்துவிட்டது. சாமான்களை இறக்கும் கூலியாட்களுக்குக் கொடுக்க எட்டணாவும் இல்லை மதுரைக்குத் தந்தி சொல்லவும் பணம் இல்லை. சென்னையில் வெறும் ஆளாக நிற்கின்றார்.

மதுரையில் உள்ள பணம் அப்போது அவனுக்கு அங்கு உதவாதுதானே? இதுபோல், இந்தவுலகில் எத்துணைச் செல்வம் படைத்தவனும் மேல் உலகில் இடம் பெறுவதில்லை. அருட்செல்வம் படைத்தவர்களே அங்கு சிறப்பும் இன்பமும் பெற்று உயர்வு பெறுகின்றார்கள்.

''அருள்இல்லார்க்(கு) அவ்வுலகம்
இல்லை, பொருள்இல்லார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு''

என்கின்றார் திருவள்ளுவதேவர்.

இனி, அருள் செல்வம், சிறிதும் தேடி வைக்காதார்க்கு இன்னும் ஒரு பெரிய இடர்ப்பாடு இருக்கின்றது. அது என்ன? அவர்கள் உயிர் துறந்தபின் வெப்பமும் துன்பமும் இருளும் நிறைந்த உலகிலே சென்று



(அருள் தேடாத அவ்வுயிர்கள்) அல்லற்படும். அந்த இருள் உலகத்தின் துன்பம் அவ்வுயிர்கள்) அல்லற்படும். அந்த இருள் உலகத்தின் துன்பம் இத்தன்மைத்து என்று இயம்புதற்கொண்ணாது. அந்தோ! இங்குப் பெரும் சீமானாக வாகனங்களில் உலாவி, வாசனைகள் அணிந்து, பொன்னாடையும் வைர மணிகளும் பூண்டு, மாதர்களுடன் உலாவி மகிழ்ந்த இவர் அருள் தேடாமையினால், இறந்தவுடன் இருள் உலகஞ் சென்று பொறுக்க முடியாத துன்பத்தை யடைவர்.

இதனை எப்படி நம்புவது? என்று சிலர் நினைக்கலாம். பொய்யில் மறையாகிய திருக்குறள் கூறுகின்றது. அது சத்திய வேதம் அன்றோ?

அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை
இருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல்.

இத்திருக்குறளைப் பலமுறை படியுங்கள். இன்னா உலகம் - துன்பமயமான நிரயம். அங்கே விளக்கே கிடையாது.

அருள் சேர்ந்த உத்தமர்க்கு இருள் சேர்ந்த துன்ப உலகம் இல்லை என்றால், அருள் சேராத பாவிகட்கு அந்த இருள் சேர்ந்த துன்பவுலகம் உண்டு என்பது உறுதிதானே. இருபத்து நான்கு மணி நேரமும் இரவு பகலாக உழைத்து உழைத்து, உடம்பு ஓடாக

இளைக்குமாறு அலைந்து திரிந்து உழன்று ஓடி ஓடிப் பொருளைத் தேடும் மாந்தர்கள். ஒரு கணம் நேரமாவது அருளைத் தேடுகின்றார்களா?

ஒரு வாரந்தங்குவதற்குச் சென்னை, பெங்களூர், நீலகிரி, குற்றாலம், கோடைக்கானல் போகின்றவர்கள் கண்ணாடி, சீப்பு, தேங்காய் நெய், துண்டு, பல்பொடி இப்படிப்பல பொருள்களை எடுத்துத் தொகுத்துக் கொண்டு புறப்படுகின்றார்களே? சில நாள் தங்கித் திரும்புவதற்கு இத்தனைச் சாதனங்களுடன் புறப்படுகின்ற நாம், போனால் திரும்பாத அந்த உலகிற்கு புறப்படுகின்ற நாம், போனால் திரும்பாத அந்த உலகிற்கு வேண்டிய பொருள் எது என்ற எண்ணங்கூட இல்லாதவர்களாய் இருக்கின்றோமே? என்ன மதி? அல்லது அப்படி ஒரு பிரயாணம் நமக்கு இல்லை என்று எண்ணுகின்றார்களா?

மேலே எறிந்த கல் கீழே விழுந்துதானே தீரும். அது அங்ஙனமே பறந்துபோய்விடாதே? வல்லான் எறிந்த கல் சிறிது நேரம் கழித்து விழும் அதுபோல் உடம்பெடுத்த நாம் ஒருநாள் இந்த உடம்பை உதறித்தள்ளிவிட்டுப் புறப்படப் போகின்றோம். அந்தப்புறப்பாடு என்று? என்று ஒரு சோதிடரும் அறுதியிட்டு உறுதியாக உரைக்கமாட்டார்கள்.

''யாரறிவார் சாநாளும் வாழ்நாளும்'' என்கிறார் திருஞானசம்பந்தர்.

மழைக்காலத்தில் வெளியே செல்பவன் குடையை நாடுவது போல், கல்லும் முள்ளும் நிறைந்த கோடைக்காலத்தில் நடப்பவன் நடையானை நாடுவதுபோல், நாம் மரண யாத்திரை வருமுன் .அருட்செல்வத்தை விரைந்து தேடித் தொகுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அருட்செல்வம் என்பது எது? என்பதை விளக்கமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். ஒவ்வோர் உயர்களிடத்தும் இரக்கம் காட்டி அவைகட்கு வந்த இடையூறுகளை நம்மால் முடிந்தவரை தீர்க்கவேண்டும். அவ்வுயிர்களின் துன்பத்தைக் கண்டு உள்ளம் குழைந்து உருக வேண்டும். ஒல்லும் வகையால் உயிர்கட்கு உதவி புரிதல் வேண்டும்.

குசேலர் துவாரகைக்குச் செல்கின்றார். கொடிய வெயில், வழி நடக்கும் சாலையில் இருபுறங்களிலும் மரங்கள் நிழல், குளிர்ந்த நிழல், இவர் அந்த நிழலில் ஒதுங்கிச் செல்லாமல், காடு சுடுகின்ற நடுச்சாலையில் துன்புற்று தலையைக் கையை விரித்து மறைத்துக்கொண்டு நடக்கின்றார். ஏன்?

குளிர்ந்த நிழலில் ஈக்கள் எறும்புகள் புழுக்கள் முதலிய சிறிய உயிர்கள் வெயிலுக்கு ஆற்றாது ஒதுங்கியிருக்கும் நிழலில் நடந்தால் அவ்வுயிர்கள் துன்புற்று இறந்துபடும் என்று கருதிய அந்த அருளாளர் கடுங்கொடும் வெயிலில் துள்ளித் துடித்துத் துன்புற்று நடக்கின்றார். அவருடைய அருளுடைமையைச் சிந்தியுங்கள். பலர் வீட்டிலுள்ள எறும்புகளைக் கூட்டி அடுப்பில் தள்ளிவிடுகின்றார்கள். எறும்பு முதலிய உயிர்களைக் கூட்டி முறத்தில் எடுத்து கொடும் வெயிலில் கொட்டிவிடுகிறார்கள்.


எறும்புகள் பாவம். சிறு உயிர்கள் அவைகள் என்ன தொழில் செய்து உயிர்வாழ முடியும்? பசியாறுவதற்கு நாம் பல அலுவல்கள் புரிகின்றோம். அச்சுத்தொழில், இரும்புக்கடை, துணிக்கடை இப்படி பல அலுவலகங்கள், நினைத்தாலேயே உள்ளம் குழைகின்றது. சிற்றெறும்புகள் தேங்காய் மூடியில் வந்த மொய்த்துக்கொள்ளும் அதனை நிழலில் தட்டக்கூடாதா? கொதிக்கும் வெயிலில் தட்டிக் கொல்லும் மனிதர்க்கு நற்கதி கிடைக்குமோ? அவர்கள் கொதிக்கும் நரகில் அந்த எறும்புகளைப் போல் துள்ளித் துடித்துத் துன்புறுவார்கள்.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின்
தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

நமது பருத்த உடம்பில் ஓர் எறும்பு, கொசு இருந்தால் மெல்ல எடுத்து கீழே விட்டுவிட வேண்டும். 'பட்' என்று அடித்துக் கொல்லக்கூடாது. நம்மை யாராவது ஒரு பெரிய முரட்டுப் பயில்வான் படார் என்று அடிக்கக் கை ஓங்கினால் நாம் எப்படி அஞ்சுவோம்; நடுங்குவோம்; அப்படித்தானே மிகச்சிறிய உயிர்களை நாம் ஓங்கி அடிக்கின்றபோது அவைகள் நடுங்கும்.

''வலியார்முன் தன்னை நினைக்கதான்
தன்னின்
மெலியார்மேல் செல்லு மிடத்து''

என்று தெய்வப்புலவர் கூறுகின்றார். அருள் பிறத்தற்குக் காரணம் கூறுகின்றார். என்று பரிமேலழகர் இதற்கு உரை வகுக்கின்றார்.



பாம்பன் சுவாமிகள், திருநெல்வேலிக்கு அருகில் தாமிர பரணி நதிக்கரையில் உள்ள சிக்க நரசையன் பேட்டையில் ஒரு சைவருடைய வீட்டில் தங்கியிருந்தனர்.

அடிகள் நடுப்பகலில் ஒருவேளை மட்டும் உப்பு புளி மிளகாய் கடுகு நல்லெண்ணெய் கலவாத உணவு உண்ணுகின்ற நியமம் பூண்டவர்.

காலையில் அடிகள் வழிபாடு, தியானம் முதலியன செய்துவிட்டுக் கூடத்தில் அமர்ந்திருந்தனர். அங்கு ஒரு மூட்டைப்பூச்சி ஓடியது. அங்குள்ள சிறுவனைப் பார்த்து 'தம்பி! இதனை எடுத்து வெளியிலே விடு'' என்று கட்டளையிட்டனர். அச்சிறுவன் அதனை விரலால் நசுக்கிக் கொன்றுவிட்டான். அடிகளால், அதுகண்டு மனம் வருந்தி ''அந்தோ! மடவோய்! ஒருயிரைக் கொன்றனையே? உனக்கு நற்கதி கிடைக்காதே'' என்று கூறிவிட்டு, நதியில் நீராடித் திண்ணையில் அமர்ந்திருந்தனர்.

வீட்டு அம்மை உச்சிநேரத்தில் அடிகளாருக்கு உப்பில்லா உணவை ஆயத்தஞ் செய்துவிட்டு ''சுவாமி! உணவு செய்ய எழுந்தருளும்'' என்றார்.

''அம்மா! இந்த வீட்டில் ஓர் இழவு நேர்ந்துவிட்டது இன்று முழுவதும் நான் உணவு செய்யேன். நாளை பகல் நீராடி தீபதரிசனஞ் செய்த பின்னரே உண்பேன்'' என்றனர் அடிகளார்.

அம்மையாருக்கு ஒன்றும் புரியவில்லை, நமது வீட்டில் யாவர் இறந்தார்? இழவு நேர்ந்தது என்று சுவாமிகள் கூறுகின்றனரே! இதன் பொருள் யாது? என்று கருதி ''சுவாமி இந்த வீட்டில் என்ன இழவு நேர்ந்தது?'' என்று வினவினார்.


''அம்மா இம்மடவோன் ஒரு மூட்டைப் பூச்சியை நசுக்கிக் கொன்றுவிட்டான். அதுமுதல் என் மனம் வருந்திய வண்ணம் துன்புறுகின்றது. ஆதலால், அந்த உயிர் இறந்துபோன இந்த வீட்டில் இன்று உணவு செய்யமாட்டேன்'' என்றார்.

பாம்பனடிகளாரது அருளுடைமையை இந்த நிகழ்ச்சியிலிருந்து உற்று நோக்குங்கள். ஆடு கோழிகளையடித்து அப்பிணத்தையே இலையில் வைத்து நுகர்கின்ற மாக்களுக்கும் இந்த அருளுடைமைக்கும் எத்தனை தூரம்? ஆ! ஆ! உயிர்க்கொலையும் புலைப் புசிப்பும் உடையவர்கள் உள்ளத்தில் அருள் தோன்றுமா?

எனவே, மக்களாகப் பிறந்தோர் எல்லா உயிர்களிடத்தும் அருள்புரிந்து, தெய்வத் திருவருளைப் பெறுதல் வேண்டும். செடி கொடிகளுக்குக்கூட இடர்புரியக்கூடாது குருபலம் என்ற பெரியவர் அண்மையில் வாழ்ந்தவர். அவர் விளக்கு மாற்றத்தைக்கூட தலைகீழாக வைக்கக்கூடாது என்று கூறினாராம் என்னே அருளுடைமை?

உலகம் அருட்செல்வத்தைப் பெறுதற்கு முயலுமாக மக்கள் உள்ளத்தில் அன்பு பூத்த அருள் பழுக்கட்டும்.

# ஆடவல்லானின் ஆனித் திருமஞ்சனம்



எல்லையில் பெருங்கூத்தினை ஆடி ஐந்தொழில் புரிந்தவாறே ஆனந்த நடனமாடிக் கொண்டிருக்கும் சிவபெருமானின் திருக்கோலமே நடராசர் திருவுருவமாகும். அப்பெருமானைச் சபாபதி என்று அழைக்கின்றனர். அவருக்கு தினமும் அலங்காரம் செய்து பூசிப்பர் அத்திருமேனிக்கு நாள்தோறும் நடத்தப்பட வேண்டிய அபிஷேகத்தை அவருடைய பிரதிபிம்பமாக எழுந்தருளியிருக்கும் சந்திரமௌலீசுவரர் (அ) திருச்சிற்றம்பலம் உடையார் என்னும் சிவலிங்கத் திருமேனிக்குச் செய்கின்றனர்.

ஆண்டிற்கு ஆறுமுறை மட்டும் நடராசப் பெருமானுக்குப் பெரிய அளவில் அபிஷேகம் நடைபெறும். இது சித்திரைத் திருவோணம், ஆனி உத்திரம், ஆவணி வளர்பிறை சதுர்தசி, புரட்டாசி வளர்பிறை சதுர்த்தி, மார்கழி திருவாதிரை, மாசி வளர்பிறை சதுர்த்தி, ஆகிய நாட்களில் நடைபெறுகின்றன. இதில் ஆனிமாத வழிபாடு மட்டும் அபிஷேகச் சிறப்புடன் ''ஆனித்திருமஞ்சன விழா'' என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆறும் ஆறுகால பூஜைகளாகப் போற்றப்படுகின்றன. ஓராண்டை ஒரு நாளாகக் கொண்டால் மார்கழித்திருவாதிரையில் நடைபெறும் நடராசர் விழா அதிகாலைப் பூஜையாகவும், மாசி மாத விழா காலை சந்திப்பூசையாகவும், சித்திரை விழா உச்சிகால பூசையாகவும், ஆனிமாத விழா சந்தியா காலம் எனப்படும் மாலைக்கால பூசையாகவும் கொள்ளப்படும். இதில் அபிஷேகமும் மலர்தூவி வழிபடுதலும் தனிச்சிறப்பாகும். இளவேனில் காலத்தில் நடைபெறும் இவ்விழா புஷ்பாஞ்சலி செய்வதற்கு உரிய நன்னாளாகும் எனவே இவ்விழாவை தனிச்சிறப்புடன் கொண்டாடுகின்றனர்.

கோயில் என்றழைக்கப்படும் தில்லை சிற்றம்பலமான சிதம்பரத்தில் திருவாதிரையில் நடைபெறுவது போலவே ஆனிமாதத்தில் திருத்தேரோட்டத்துடன் பெருந்திருவிழா கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின் எட்டாம் நாளில் மாணிக்கவாசகர் முத்திபெற்ற மக நட்சத்திரமும் சேர்ந்து வரும். எனவே இது ஆண்டவன், அடியார் விழாவாக அமைகிறது.

சிவபெருமான் மணிவாசகரை ஆட்கொண்ட திருத்தலமான திருப்பெருந்துறையிலும் ஆனித் திருமஞ்சனத்தையொட்டி பெரிய தேர் ஓட திருவிழா பத்து நாட்கள் கொண்டாடப் படுகின்றன. இதில் பத்தாம்நாள் மாணிக்கவாசகரை நடராசராகவே அலங்கரித்து பவனி வரச் செய்கின்றனர்.

திருவிடைமருதூரில் இரண்டு நடராசர் திருவுருவங்கள் உள்ளன. பெரிய நடராசர் திருவாதிரையிலும் சிறிய நடராசர் ஆனித் திருமஞ்சனத்திலும் பவனிவந்து அருள்பாலிக்கின்றனர்.

ஆனி உத்திரநாளில் அபிசேக அலங்காரம் செய்து வழிபடுபவர்கள் இம்மையில் மேன்மையான வாழ்வையும் மறுமையில் முத்தின்பத்தையும் பெறுவர் என்று பூஜா நூல்கள் கூறுகின்றன.




# திருவான்மியூர், அருள்மிகு மருந்தீசுவர் திருக்கோயில்

தேவாரத் திருத்தலம்:

சென்னை மாநகரின் தென்பாகக் கடற்கரையோரம் கிழக்குக் கடற்கரைச் சாலையில் இயற்கைச் சூழலில் அமைந்துள்ள திருவான்மியூர் எனும் தெய்வ மணம் கமழும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு திரிபுரசுந்தரி அம்மை உடனாய அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், அருணகிரிநாதர் முதலான அருளாளர்களால் பாடிப்பரவப் பெற்ற பழைமையான புகழ்பெற்ற வழிபாட்டு திருத்தலமாகும்.

தொண்டை நாட்டிலுள்ள பாடல்பெற்ற முப்பத்திரண்டு திருத்தலங்களில் திருவான்மியூர், 25வது திருத்தலமாகவும், சுயம்புலிங்க ஷேத்திரமாகவும், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று சிறப்புகளையும் தன்னகத்தே கொண்ட திருக்கோயிலாகவும் விளங்கி வருகிறது.

புராண வரலாறு

மார்க்கண்டேய முனிவர் உபதேசித்தபடி, வான்மீகி முனிவர் இத்திருத்தலத்தில் உறையும் இறைவனை வழிபட்டு முத்திப்பேறு பெற்றதால், அவர் பெயரால் இத்தலம் திருவான்மியூர் என அழைக்கப்படுகிறது.

தேவர்கள் திருப்பாற் கடலில் கடைந்தெடுத்த அமுதத்தால் சிவலிங்க பிரதிஷ்டை செய்து வழிபட்ட காரணத்தால் இறைவன் அமுதீசர் என்றும், வேதங்கள் கூடி வழிபட்டதால்,

இறைவன் வேதபுரீஸ்வரர் என்றும் வழங்கப்படுகிறார்.

மேலும் வான்மீகி முனிவருக்கு வன்னி மரத்தடியில் இறைவன் திருநடனக் காட்சியருளிய திருத்தலமாகவும், காமதேனு இறைவன் மீது பால்சொரிந்து வழிபட்ட சிறப்புடைய தலமாகவும், இந்திரன், பிரம்மதேவன், ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி, ஸ்ரீ இராமபிரான் முதலான தேவர்களும் வழிபாடு செய்து இறையருள் பெற்ற புண்ணிய க்ஷேத்திரமாகவும் விளங்குகிறது.

அகத்தியருக்கு இத்திருத்தலத்திலுள்ள தலவிருட்சமான வன்னி மரத்தடியில் இறைவன் தமது திருமணக்கோலக் காட்சியை அருளிய தாகவும், அகத்தியரின் வேண்டுகோளுக் கிணங்கி அவருக்கு நோய்களின் வகைகளையும் அவற்றிற்கான மூலிகை வகைகளையும் மருந்தின் தன்மைகளையும் எடுத்துரைத் ததாகவும், அதனால் இறைவன் மருந்தீசுவரர் என அழைக்கப்படுவதாகவும் தல புராணம் கூறுகிறது.

வரலாற்றுச் சிறப்பு

இத்திருத்தலம் பல்லவர்கள் அரசாண்ட ஏழாம் நூற்றாண்டிலேயே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றோரால் பாடப் பெற்றிருப்பதால், சுமார் 1300 ஆண்டுகளுக்கு முற்பட்டப் பழைமையான கோயிலாகக் கருதப்பெறுகிறது.

இத்திருக்கோயில் அம்மன் கருவறையின் புறச்சுவரிலுள்ள ஏழு கல்வெட்டுகளின் மூலம் 11ஆம் நூற்றாண்டில் ஆண்ட பரகேசரிவர்மன் எனும் முதலாம் இராஜேந்திரன் (1011- 43) இராஜாதிராஜன் (1018-52) இராஜேந்திர சோழதேவன்(1052- 63) முதலான சோழமன்னர்கள் இத்திருக் கோயிலில் பல்வேறு திருப்பணிகள் செய்திருப்பதையும், கோயிலுக்குக் கொடைகள் பல ஏற்படுத்தி இருப்பதையும் அறிய முடிகிறது.

கங்கைகொண்ட சோழன் எனும் இராஜேந்திர சோழன் இத்திருக்கோயில் வழிபாட்டில் பெரிதும் ஈடுபாடு உடையவனாக இருந்ததுடன் இத்தலத்திற்குப் பலமுறை வந்ததாகவும், அந்திம காலத்தில் தனக்கு ஏற்பட்ட கடும் நோய் நீங்க வேண்டி. மருந்தீசுவரரை வணங்கி வழிபட்டதாகவும் வரலாற்றுச் செய்திகளின் மூலம் தெரியவருகிறது.

பல்லவ மன்னர்கள் காலத்திலேயே இத்திருக்கோயில் சிறப்புப் பெற்றிருந்ததாலும், கோயிலின் பெரும்பகுதி சோழர் காலத்தில் தான் கட்டப்பெற்றிருக்கிறது. சோழ மன்னர் களே இத்திருக்கோயிலைக் கற்றளியாக் கினார்கள் என்று கூறப்படுகிறது.

சோழ மன்னர்களுக்குப் பிறகு, விஜயநகர மன்னர்களும் இத்திருக்கோயிலை நன்கு பரிபாலனம் செய்திருக்கின்றனர். ஜெயங் கொண்ட சோழ மண்டலத்தின் புலியூர்க் கோட்டத்தில் கோட்டூர் நாட்டு தேவதானமாகத் திருவான்மியூர் விளங்கிய தையும், சுவாமியின் பெயர் திருவான் மியூருடைய மகாதேவர், திருவான்மியூர் உலகாளுடைய நாயனார் என்றழைக்கப் பட்டதையும் கல்வெட்டுகளின மூலம் அறிகிறோம்.

கோயில் அமைப்பு:

திருக்கோயில் மூலஸ்தானம் மேற்கு நோக்கியும், பிரதான கோபுர வாசல் கிழக்கு நோக்கியும் உள்ளன.

கிழக்குக் கோபுரவாயில் வழியே திருக்கோயிலுக்குள் நுழைந்தவுடன், வள்ளி தெய்வயானை சமேதராகச் சுப்பிரமணியர் எழுந்தருளியுள்ள சன்னதியும், விநாயகர் வீற்றிருக்கும் சன்னதியும் காட்சியளிக்கின்றன. அருணகிரிநாதர் இங்கு வந்து இத்தலத்திலுள்ள முருகப்பெருமான் மீது திருப்புகழ் பாடிப் பரவியிருக்கிறார்.

கோயிலின் வலப்பக்கத்தில் திரிபுரசுந்தரி அம்மை தெற்கு நோக்கியவாறு நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறாள். அம்மையின் முன்பு இடபம் இல்லை. சிம்மம் இருக்கிறது.

அடுத்ததாக நாம் காணும் தியாகராஜர் மண்டபம், இங்கு கிழக்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ள தியாகர் ஆடும் தியாகர், இவரே வான்மீகி முனிவருக்கு வன்னி மரத்தடியில் திருநடனக் காட்சியை அருளினார்.

தொண்டை நாட்டிலுள்ள திருவான்மியூர், திருவொற்றியூர், திருக்கச்சூர் ஆகிய மூன்று

தலங்களிலும் தியாகராஜர் காட்சியளிக்கிறார். இன்றும் ஒவ்வொரு பௌர்ணமியன்றும் தியாகர் நடனவிழா சிறப்பாக நடைபெறுகிறது. பங்குனி மாத பிரம்மோற்சவத்தின் போது நடைபெறும் பதினெண் திருநடனங்களும் பெருஞ்சிறப்புடையதாகும்.



தியாகராஜர் மண்டபத்தின் வடக்கில் அமைந்துள்ள வாயில் வழியே சுவாமி சன்னதியை அடையலாம். கருவறையில் சுவாமி சிறிது வடபுறம் சாய்ந்து பால் போன்ற வெண்மை நிறத்தில் பால்வண்ண நாதராகக் காட்சியளிக்கிறார்.

சுவாமி சன்னதி உட்பிரகாரத்தில் விநாயகர், நால்வர், கஜலட்சுமி, முத்துக்குமாரசுவாமி, சிவகாமசுந்தரி, மாணிக்கவாசகரோடு நடராசப் பெருமான், 108 சிவலிங்கங்கள், கால பைரவர், அறுபத்து மூவர் முதலிய மூர்த்திகளைத் தரிசிக்கலாம்.

கருவறையின் புறச்சுவரில் துர்க்கை, பிரம்மா, திருமால், தென்முகக் கடவுள், விநாயகர் ஆகியோர் தெய்வீக கலையம்சத்தோடு காட்சியளிக்கின்றனர்.

வழிபாடு விழாக்களும்

இத்திருக்கோயிலில் காமிக ஆகமப்படி நாள்தோறும் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன

| | | |
|---|---|---|
| காலைச்சந்தி | - | காலை 7.30 மணி |
| உச்சிக்காலம் | - | காலை 10.30 மணி |
| சாயரட்சை | - | மாலை 4.30 மணி |
| அர்த்தஜாமம் | - | இரவு 8.30 மணி |

நாள்தோறும் விடியற்காலை 5.30 மணிக்கு கோ பூஜையும், இரவு 8,30 மணி முதல் 9.00 மணிவரையில் பள்ளியறை பூஜைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன.

காலை 5.00 மணி முதல் பகல் 12. மணி வரையிலும், மாலை 4.00 மணியிலிருந்து இரவு 9.00 மணி வரையிலும், பொதுமக்கள் தரிசனத்திற்குத் திருக்கோயில் திறந்திருக்கும்.

இத்திருக்கோயிலில் மாதந்திர விழாக்களான பிரதோஷம், கிருத்திகை, பௌர்ணமி ஆகியவை சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.

அன்னாபிஷேகம், நவராத்திரி, கந்தர் சஷ்டி, கார்த்திகை தீபம், ஆருத்ரா தரிசனம், மகா சிவராத்திரி முதலான விழாக்களும், பங்குனி மாதத்தில் 11 நாட்கள் நடைபெறும் பிரம்மோற்சவமும் இத்திருக்கோயிலில் வெகு விமரிசையாக நடைபெறும் திருவிழாக்களாகும்.

இறைவன்

அருள்மிகு மருந்தீசர், பால்வண்ண நாதர், ஔஷதீசுவரர், வேதபுரீஸ்வரர், அமுதீசர்.

இறைவி

திரிபுரசுந்தரி, சொக்கநாயகி

தீர்த்தம்

ஜன்ம நாசனி, பாப நாசனி, காம நாசனி, ஞான தாயினி, மோட்ச தாயினி எனும் பஞ்ச தீர்த்தங்கள்.

தற்போது பாப நாசனி எனும் பெரிய தெப்பக்குளமும், ஜன்ம நாசனி எனும் சித்திரைக்குளமும் மட்டுமே உள்ளன.

தலமரம்

வன்னி மரம்.

வேண்டுகோள்

உடற்பிணி மட்டுமின்றி, தன்னை உள்ளன்போடு உருகி வழிபடுவோ ரின் பிறவிப்

பிணியையும் தீர்த்தருளும் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக் கோயில் சென்னை மாநகரிலுள்ள பிரசித்தி பெற்ற பிரார்த்தனைத் தலமாக தற்போது விளங்கி வருகிறது.

இத்திருக்கோயிலில் உள்ள பசுமடத்தில் 15 பசுமாடுகள் நன் முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

நாள்தோறும் நண்பகலில் நூறு ஏழை எளியோருக்கு அன்னதானம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இத்திருக்கோயிலில் தேவாசிரியன் மண்டபமொன்று கட்டப்பெற்று, 15.09.2001 முதல் நாள்தோறும் சமயச் சொற்பொழிவுகள், மாதந்தோறும் தேவாரம், திருவாசகம் முற்றோதல், சனிக்கிழமைதோறும் சிறுவர் சிறுமியருக்குத் திருமுறை இசைப்பயிற்சி அளித்தல் முதலானவை தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.



இத்திருக்கோயிலில் கடந்த 24.02.2002 அன்று வேத பாடசாலை ஒன்று துவங்கப் பெற்று, வேத விற்பன்னர்களைக் கொண்டு இளஞ்சிறார்களுக்கு வேதபாடம் கற்பிக்கப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமைதோறும் மாலையில் சிறுவர், சிறுமியருக்கு ஆன்மிக வகுப்பு நடத்தப்பெறுகிறது.

நன்கொடை அளிக்க மற்றும் இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள

இணையதளம்:
www.marundeeswarartemple.com
மின்னஞ்சல்:
marundeeswarartemple@vsnl.net
தொலைபேசி எண். 044-24410477. 24422688

செயல் அலுவலர்,
அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில்,
திருவான்மியூர், சென்னை - 600 041.


| | |
|---|---|
| சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் | த. பிச்சாண்டி. இ.ஆ.ப., சிறப்பு ஆணையர் இந்து சமய அறநிலையத் துறை, சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13 |
| ஆசிரியர்(கூ.பொ) | ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர் |
| அச்சிடுவோர் | சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்.., சென்னை – 86 தொலைபேசி : 23450920/ 28117575 |














மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் 85வது பிறந்தநாளைமுன்னிட்டு வடபழனி அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாம் மற்றும் 16.5.2008 அன்று நடைபெற்ற அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலின் தேரோட்ட விழாவில் மாண்புமிகு இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே ஆர். பெரியகருப்பன் அவர்கள் மற்றும் அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் திரு. த. பிச்சாண்டி இ.ஆ.ப. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில்
# ஒப்பிலியப்பன் கோயில்


திருநாகேஸ்வரம், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்
Web:WWW.oppiliappanswamytemple.org, E-mail: uppiliappan_koil@dataone.in
Phone:0435-2463385, 2463685 Fax: 0435-2463906

## மூலவர் விமானம் தங்கரேக் பதிக்கும் திருப்பணி வேண்டுகோள்.

தற்போதைய விமானம்



தங்க ரேக் பதிக்கப்படஉள்ள விமானம்




மூலவர் விமானம் திருப்பதியை போன்று தங்க ரேக் பதிக்கும் திருப்பணிக்கு சுமார் 90 கிலோ தங்கம் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய விமானத்தினை செப்பனிட்டு செம்பிலான கவசம் செய்து அதன் மீது தங்கரேக்குகள் பதிக்கப்படவுள்ளன. இந்த உன்னதமான திருப்பணி ஒவ்வொரு அடுக்கிற்கும் தனித்தனியே மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு தேவையான பொருளுதவி முழுவதும் உபயதாரர்களாகிய தங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. தங்களால் இயன்ற அளவு பணமாகவோ, தங்கமாகவோ, காசோலை, வரைவேலை, மணியார்டர் இதர வகைகளில் உதவி ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில், ஒப்பிலியப்பன் கோயில், திருநாகேஸ்வரம், கும்பகோணம் என்ற முகவரிக்கு அல்லது திருக்கோயில் அலுவலகத்தில் நேரிலும் அளித்து பெருமாளின் பேரருளை பெற வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

**த. விஜயகுமார்** M.A.B.L.,
உதவி ஆணையர் / செயல் அலுவலர்

**ராயா. ஆர். கோவிந்தராஜன்**
அறங்காவலர் குழுத் தலைவர்

அறங்காவலர்கள்

**கோ.சி. இளங்கோவன்,** பி.ஏ.,
திருமதி **புனிதா மயில்வாகணன்,** பி.ஏ.,

**சீ. தாமரைச்செல்வன்**
**க. பார்த்திபன்**